நடைபெறுகின்றன!
91 A/L
விஞ்ஞானப்பிரிவு
இரசாயனவியல்—திரு BAR
பௌதீகவியல்-திரு கணேசன்
விலங்கியல்—திரு ஞானம்
தாவரவியல்—திரு பாலா
நாவலர்
சித்தன்கேணி,

பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 121 புதன் 06.06.1990 வைகாசி 23 துல்ஹஜ்ஜா 12

நடைபெறுகின்றன!
91 கலை\வர்த்தகம்
பொருளியல் திரு. கலாகரன்
வர்த்தகம் திரு தேவா
அளவையியல் திரு கேசவன்
தமிழ் திரு. கணேசமூர்த்தி
இந்துநாகரிகம் அருள்நங்கை
கணக்கியல் திரு. ஸ்ரீகாந்தன்
நாவலர்
சித்தன்கேணி.

## அரசை வலியுறுத்துகிறது ஈரோஸ்

# எவ்வித முன் நிபந்தனையுமின்றி 6-வது ஷரத்தை நீக்க வேண்டும்

"எந்தவிதமான முன் நிபந்தனைகளுக்கும் இடமளிக்காத வகையில் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கவேண்டும்."

இவ்வாறு ஈழவர் ஜனநாயக முன்னணி நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளது.

''தமிழ் பேசும் மக்கள் ஜனநாயக அரசியல் செயற்பாடுகளில் நம்பிக்கை கொள்ளத்தக்க சூழலை உருவாக்குதல் வேண்டும்.'' என்றும் இவ்வறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் முழு விபரம் வருமாறு:

1978-ம் ஆண்டின் அரசியல்

—08ஆம் பக்கம் பார்க்க

## பரந்தன் சந்தியில் நோய்க் கிருமிகள் 'தடாகம்'

பரந்தன் சந்தியில் உள்ள அரிசி ஆலைகளின் கழிவு நீர் தேங்கி பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நோய்க்கிருமிகள் உற்பத்தியாகிறது.

இப்பகுதியில் கழிவு நீர் தேங்கி துர் நாற்றத்துடன் மக்கள் நடமாடும் ஒழுங்கைகள் வழியாகவும் பரவிப் பாய்கிறதுடன் நுளம்புகளும் வேகமாக உற்பத்தியாகி வரு

— 8 ஆம் பக்கம் பார்க்க

### விடுதலைப்புலிகள் அனுசரணையுடன்

## மக்கள் குறைகளைய மட்டக்களப்பில் ஒருங்கிணைந்த அரசாங்க செயலகம்

அரசாங்கத் திணைக்களங்களில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தாமதமின்றித் தீர்வு காண்பதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட அரசாங்க செயலகம் ஒன்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - திருமலை வீதியில் இச்செயலகம் திறக்கப்பட்டுள்ளது.

கச்சேரி, மாநகரசபை, கல்வி சுகாதாரம், புனர்வாழ்வு, புனரமைப்பு, உட்பட அரச திணைக்களங்களின் சார்பில் ஒவ்வொரு ஊழியர் இச்செய

—08ஆம் பக்கம் பார்க்க

### மாவட்ட மட்டப் பேச்சுக்களின் முதல் கட்டம்


## மட்டக்களப்பு நிலைமை புலிகள்-அரசு ஆலோசனை

விடுதலைப்புலிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையிலான மாவட்ட மட்டப்பேச்சுக்களின் முதலாவது கட்டமாக நேற்று மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளுக்கும் பாதுகாப்புப்படைத் தலைவர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

பேச்சுக்களின் போது புலிகள் — அரசு போச்சுக்களை தொடர்ந்து எவ்வாறு முன்னேற்றகரமாக கொண்டு செல்லலாம் எனவும் ஆராயப்பட்டது.

### புலிகளின் வழிக்கு வந்தது எப்படி?

## யதார்த்த பூர்வ நிலையினை அரசு உணர்ந்ததே காரணம்



(ஸ்ரீ)

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இப்போதெல்லாம் அதி முக்கிய கௌரவமளித்துத் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடாத்தி வருவதற்கும், புலிகளின் கோரிக்கைகளை நியாயமானவை என ஏற்று உடன் கருமத்தில் இறங்குவதற்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் சமீப காலத்தில் பற்றி நின்ற மிக இறுக்கமான நிலைப்பாடே காரணமாக அமைகின்றதென கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

தமிழீழத் தாயக மக்களின் நிரந்தர பாதுகாப்பு, கிழக்கில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத் தடுப்பு, மற்றும் இராணுவ முகாம்கள் பலப்பு, துருப்புகள் குவிப்பு என்பன பற்றி புலிகள் தலைவர் திரு.வி.பிரபாகரனின் தீட்சண்யமும் தீர்க்க தரிசனமும் கொண்ட வழி நடத்தலில் தமது நிலைப்பாட்டில் சற்றேனும் வளைந்து கொடுக்காத தன்மையில், மிக மிக வலுவான போக்கில் செயற்பட்டமை அரசாங்கத்தின் உயர் மட்டத்தினை தளர்ச்சியடையச் செய்து விட்டதென்றே கருத வேண்டியுள்ளதென இவ்வட்டாரங்கள் கூறின.

பாதுகாப்புப் படையினரின் யுத்த முஸ்தீபு மனோ நிலை கண்டு புலிகள் ஜரூராகத் தமது பலத்தை மின்னல்

—08ஆம் பக்கம் பார்க்க

## கைதான இந்திய மீனவர்கள் நேற்று புலிகளினால் விடுதலை

நேற்று முன்தினம் இலங்கை கடல் எல்லைக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது விடுதலைப்புலிகளினால் பிடிக்கப்பட் முப்பது மீனவர்களும் அவர்களது ஐந்து படகுகளுடனும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட முப்பது இந்திய மீனவரும் இந்தியா சென்றடைந்துள்ளதாக கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த இருதினங்களாக இம்மீனவர்கள் புங்குடுதீவில் விடுதலைப்புலிகளின் பராமரிப்பில் வைக்கப்பட்டிருந்தனர்

## கடதாசியுடன் சென்றால் மல்லாவி ஆஸ்பத்திரியில் மருந்து

மல்லாவி அரச மருத்துவமனையில் வெளி நோயாளர்கள் மருந்து எழுதும் கடதாசியுடன் சென்றுமருந்துபெற்று வருகின்றனர்.

இம்மருத்துவ மனையில் கடந்த சில காலமாக வெளி நோயாளர்கள் வைத்திய பரிசோதனைக்கு செல்வதாயின்

—8 ஆம் பக்கம் பார்க்க்

## வெலிஓயா, அம்பாறை, திருமலை மக்கள் தொகை என்ன?

### ஈரோஸ் கேள்வி முன்னறிவிப்பு

பாராளுமன்றத்தில் திரு. தில்லை நாதன் யாழ். மாவட்ட பிரதிநிதி திட்டமிடல் கொள்கை வகுப்பு ராஜாங்க அமைச்சரிடம் வாய் மொழி மூல விடைக்காகக் கொடுத்துள்ள வினாக்கள். பின்வருமாறு.

- வெலிஓயா, அம்பாறை, திருகோணமலை தேர்தல் மாவட்டங்களில் வாழும் சிங்கள மக்களின்தொகை என்ன?
- மேற்படி மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்களின் தொகை என்ன?
- மேற்படி மாவட்டங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் தொகை என்ன?

# மலையகத்தில் இரகஸிய இராணுவப்பிரிவு?

மலையகப்பகுதியில் இராணுவப் பிரிவி ஒன்று மறைமுகமாக இயங்கிவருகிறதா? இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான திரு சௌமியமூர்த்தி தொண்டமான் பரபரப்பூட்டும் இக் கேள்விக்குப் பதிலளித்தார். ''அப்படி ஒரு பிரிவு இருந்தால் என்றாவது ஒரு நாள் வெளிவரவேண்டும் அல்லவா?'' என்று அவர் இதற்குப் பதிலளிக்கையில் சொன்னார். திரு தொண்டமான் தனது அமைச்சில் நடத்திய விசேட பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்படி கேள்வி எழுப்பப்பட்டது. சில குழுக்கள் மலையகத்தைத் தனிமாகாணமாக அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விட்டுள்ளதைப் பற்றிக்கேட்ட போது, ஐம்பது வருடம் தோட்டக் கமிட்டிகளை வைத்து அவற்றையே ஒழுங்காக நடத்த முடியவில்லை சமூகத்துக்கு எது உபயோகம் என்பதைப் பார்த்துக் கோரிக்கை விடுக்கவேண்டும்'' என்றார் அவர். மலையகத்துக்கெனத் தனி மாகாணம், தனிச்சபை வேண்டுமென திரு பி. சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி சமீபத்தில் கோரிக்கை விடுத்திருந்தது 'முரசொலி' வாசகர்கள் அறிந்ததே.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மகாபொல கொடுப்பனவு -88/89

### 9ம், 10ம், தவணைப் பணங்கள்

### மருத்துவபீட மாணவர்கள்

| | | |
|---|---|---|
| 1 | 2-ம், 3-ம் வருடங்கள் | 05.06.90 — 9.00 - 12.00 |
| | | 08.06.90 — 9.00 - 12.00 |
| | | 11.06.90 — 1.30 - 3.00 |
| 11 | 4-ம், 5-ம் வருடங்கள் | 05.06.90 — 1.30 - 3 00 |
| | | 06.06.90 — 9.00 - 12.00 |
| | | 11.06.90 — 9.00 - 12.00 |

மேற்படி, கொடுப்பனவுக்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. கொடுப்பனவின்போது:-

1. தேசிய,பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூ. 2/- பெறுமதியான முத்திரை
3. மாணவர் பதிவுப்புத்தகம் என்பன சமர்ப்பிக்கப் பட வேண்டும்.

★ தேசிய அடையாள அட்டைகளின்றி கொடுப்பனவுகள் செய்யப்பட மாட்டாது.

பதிவாளர்.
06039



## திருமலையில் முரசொலி

முக்கிய செய்திகளை முந்தித் தரும் முரசொலியை திருமலை வாசகர்கள் முரசொலியின் திருமலை முகவரான

ஏ. எஸ். சபாநாதன்

சுசி புக்கிங் சென்ரர்
217, பிரதான வீதி,
திருமலை

என்னும் முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மற்றும் முரசொலி விற்கப்படும் இடங்கள் வருமாறு:

றிங்கோ புத்தகசாலை
27, பிரதான வீதி,
திருகோணமலை.

சூசை கடை,
12, கிறீன் வீதி,
திருகோணமலை.

ஜானி சென்ரர்
392 மின்சார வீதி,
திருகோணமலை.

சாந்தினி ஸ்ரோர்ஸ்,
99, திருஞான சம்பந்தர் வீதி,
திருகோணமலை.

நியூ நவதானிய ஸ்ரோர்ஸ்
60, சிவன் வீதி,
திருகோணமலை.

நியூ ஹோட்டல் எவரஸ்ட்
380, நீதிமன்ற வீதி,
திருகோணமலை.

காதிரியா கூல்பார்
429, டொக்யாட் வீதி,
திருகோணமலை.

R. S. அப்துல் றபீக்
470, டொக்யாட் வீதி,
திருகோணமலை.

ஶ்ரீ சதாஸ்
60, வித்தியாலயம் வீதி,
திருகோணமலை.

ஆனந்தா ஸ்ரோர்ஸ்
155, பிரதான வீதி,
திருகோணமலை.

றஞ்சனாஸ் ஸ்ரோர்ஸ்
84, பாத்திமா வீதி,
திருகோணமலை.

உமையாள் கபே
332, நீதிமன்ற வீதி,
திருகோணமலை.

அம்பாள் கபே
79, தபாலக வீதி,
திருகோணமலை.

கிருஷ்ண விலாஸ்
183, மத்திய வீதி.
திருகோணமலை.

ஶ்ரீ பத்மா ஸ்ரோர்ஸ்
207, மத்திய வீதி,
திருகோணமலை.

சிவயோக ஸ்ரோர்ஸ்
209, மத்திய வீதி,
திருகோணமலை.

நியூ யாழ். கபே
51/A பிரதான வீதி, திருகோணமலை.

உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்


## இன்று நாள் எப்படி?

மேடம்: உயர்பதவி, பணவரவு, தூரத்துப் பிரயாணம், தேடியவர் வருகை, விவாக நிட்ஷயம்.

ரிஷபம்: மாதா வழியுதவி, வாகன சுகம், வணிகர்கள், கடல் தொழில் செய்வோர் இலாபம்.

மிதுனம்: தேடியவர் வருகை, இரு தொழில், சகோதர வழி நன்மை, தூரத்து செய்தியால் நன்மை.

கடகம்: விவாக நிட்ஷயம், பணவரவு, மாமன் வழியுதவி, புத்திர வழிச் சுகம், புகழ் தேடி வரும்.

சிங்கம்: பெண்களால் கவலை, வாகன நஷ்டம், இராஜ பயம், உடன் பிறந்தோரால் நன்மை, வணிகர்கள், கடல் தொழில் மத்திமம்.

கன்னி: திருடர் பயம், உடல் நலக்குறைவு. வாகன மாற்றம், புதுத் தொழில், தெய்வ ஆசி.

துலாம்: பணவரவு, வாகன சுகம், வாக்கு வல்லமை, வணிகர்கள், கடல் தொழில், இயந்திர தொழில் மூலம் இலாபம்.

விருட்ஷிகம் தேடியவர்வருகை கல்வியால் தொழில், காதலர் மகிழ்ச்சி, வாக்கு வல்லமை, சுகஜீவியம்.

தனுசு: புத்திர சுகம், வெளிநாட்டுப் பிரயாணம், தேடியவர் வருகை, உயர்பதவி, விவாக நிட்ஷயம்.

மகரம்: உடல்ரோகம், பணள தடை, மனக்கிலேசம், வாகன சுகம், வணிகர்கள், கடல் தொழில் இலாபம்.

கும்பம்: இலட்சுமி கடாட்சம், பணவரவு, வாகன சுகம், தூரத்துப் பிரயாணம், புதுத் தொழில், மனையலங்காரம்.

மீனம்: வாகன மாற்றம், புகழ் தேடி வரும், திடீர்ப்பிரயாணம், தேடியவர் வருகை, வாகன இலாபம், வணிகர்கள் கடல் தொழில் மூலம் இலாபம்.

யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

## ஊழியருக்கு கருத்தரங்கு

யாழ் மாவட்ட சுகாதார திணைக்கள உயர் அதிகாரிகள் விசேட கருத்தரங்குகளை புங்குடுதீவு அரசினர் வைத்திய சாலை ஊழியர்களுக்கு நடாத்தி வருகின்றனர்.

இக் கருத்தரங்கில் இப்பகுதிகளில் அதிகமாக காணப்படும் தொற்று நோய்களைப் பற்றியும், இங்கு காணப்படும் சுகாதார குறைபாடுகள் பற்றியும் இவ்வைத்திய சாலை ஊழியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வகையான விசேடகருத்தரங்குகள் தீவுப்பகுதியின் சகல பகுதிகளிலும் இடம் பெறவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (20கி)

## ‘தி ஐலண்ட்’ கட்டுரைப் போட்டியில் ஞானராஜா தெரிவு

‘தி ஐலண்ட்’ நாளிதழ் புது வருடத்தை முன்னிட்டு நடாத்திய கட்டுரைப் போட்டியில் ஆங்கிலப் பிரிவில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் ம.ம. வித்தியாலய மாணவன் சுசில் சி. ஞானராஜா எழுதிய கட்டுரை பாராட்டைப் பெறும் பத்து கட்டுரைகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (கி)

அகில இலங்கை இந்துசமயப் போட்டி:

## வெற்றி பெற்ற மாணவருக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது

(பருத்தித்துறை)

அகில இலங்கை ரீதியில் இந்து சமய, இந்து கலாசார அமைச்சினால் நடாத்தப்பட்ட இந்துசமயப் போட்டிகளில் முதலாம் இடங்களைத் தட்டி தங்கப் பதத்கங்களைப் பெற்றுக் கொண்ட ஒன்பது மாணவர்களுக்கும் கிராமியகைத் தொழில் அபிவிருத்தி, உல்லாசப் பயணத்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் அண்மையில் தங்கப் பதக்கங்களை அணிவித்துக் கௌரவித்தார்.

இப்பரிசளிப்பு விழா பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் இந்து சமய, இந்துகலாசார இராஜாங்க அமைச்சர் பி.தேவராஜ் தலைமையில் நடைபெற்றது. கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன், கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ் செல்லச்சாமி, இந்து சமய, இந்து கலாசாரப் பதில் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர் வி. விக்கிரமராஜா ஆகியோரும் உரையாற்றினர்

அகில இலங்கை ரீதியாக முதல் இடங்களைத் தட்டி அமைச்சர் தொண்டமானால் தங்கப்பதக்கம் அணிவிக்கப் பட்டுக் கௌரவிக்கப்பட்ட மாணவர்கள் விபரம்:-

பண்ணிசைப் போட்டி மேற்பிரிவு:— செல்வி எஸ்.சிவரதி (தெல்லிப்பழை), மத்திய பிரிவு செல்வி என. ஜெயபாரதி (பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கம், மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரி பருத்தித்துறை' கீழ்ப்பிரிவு- செல்வி மலிதரங்கி (சைவ வளர்ச்சிக்கழகம் மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பழை)

கட்டுரைப்போட்டி மேற்பிரிவு:- செல்வி ஏ. வானதி (சைவ வளர்ச்சிக் கழகம், தெல்லிப்பழை) மத்தியபிரிவு- செல்வி கே. கௌசீதகி (சிவநெறிக் கழகம்கீரிமலை) கீழ்ப்பிரிவு- செல்வன் என். மகேஸ்வரன் (சைவ வளர்ச்சிக் கழகம் தெல்லிப்பழை)

பேச்சுப்போட்டி மேற்பிரிவு- செல்வி ஜெ. சசிகலா (இரம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் வவுனியா) மத்திய பிரிவு- செல்வன் சதீஸ் பாலமுரளி (தெல்லிப்பழை) கீழ்ப்பிரிவு- செல்வி கே. மதுமையாள் (வித்தியாலய வீதி, திருகோணமலை) (15-கி

நாடு திரும்பும்

## பணிப் பெண்களின் பெயரில் இப்படியொரு மோசடி

மேற்காசிய நாடுகளுக்கு வேலைக்கென அனுப்பி வைக்கப்பட்ட வீட்டுப் பணிப் பெண்களின் பெயர்களின் கீழ் இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான தங்கம், மற்றும் ஆடம்பரப் பொருட்களை கடத்திக் கொண்டு வரும் தொழில் முகவர்களின் மோசடி ஒன்றை சுங்கப் பகுதியினர் கண்டு பிடித்துள்ளனர்.

வெளிநாடுகளில் வேலை செய்து விட்டு நாடு திரும்பும் பணிப் பெண்களுக்குத் தெரியாமல் களவாக அவர்களின் பெயரில் இப் பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன.

நாடு திரும்பிய இப்பணிப் பெண்களின் கடவுச் சீட்டுக்களை இந்தத் தொழில் முகவர்கள் உத்தியோக பூர்வமான தேவைகளுக்கு வேண்டும் என கேட்டு வாங்கி வைத்துக்கொண்டு வெறும் கடதாசியில் அவர்களின் கையெழுத்தினைப் பெறுகின்றனர்.

நாடு திரும்பிய பணிப் பெண்களின் பெயரில் விலை உயர்ந்த பொருட்கள் நாட்டிற்கு அனுப்பப்பட்டு அவர்களின் கையெழுத்து இடப்பட்ட வெற்றுக் காகிதத்தினைப்பயன்படுத்திப் பொருட்கள் அப்புறப்படுத்தப்படுகின்றன என விசாரணைகளில் இருந்து தெரிய வருகின்றது) (~கி

## அடிக்கடி அறுந்துவிழும் மாநகர மின் இணைப்புக்கள்

யாழ். மாநகரப் பகுதியின் சில பகுதிகளில் வீதியோர மின் இணைப்புகளில் உள்ள இணைப்புக்கம்பிகள் அறுந்து விழும் நிலையிலுள்ளன.

இத்தகைய நிலையிலிருந்த கம்பி யொன்று கடந்த சனிக்கிழமை கொய்யாத்தோட்டம் புதுவீதி கிறிஸ்து அரசர் ஆலயத்திற்கு அருகில் அறுந்து விழுந்தது.

இதனால் உதைப்பந்தாட்டம் ஆடிவிட்டு சென்று கொண்டிருந்த செல்வா (19) என்ற மாணவன் பலத்த மின் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதன் பின்னர் யாழ். மாநகர சபை ஊழியர்கள் அறுந்த மின் இணைப்பை சரி செய்த போதிலும் நேற்று முன்தினம் மாலை அதே இடத்தில் மின் கம்பி மீண்டும் அறுந்து வீழ்ந்து மின்தடை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (கி


## நினைவூட்டுகிறோம்

10 - 06 - 1990

ஞாயிற்றுக்கிழமை

### அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு

முதலாம் பரிசு: தொலைக்காட்சிப் பெட்டி
இரண்டாம் பரிசு: றலி சைக்கிள்
மூன்றாம் பரிசு: வானொலிப் பெட்டி.
ஐம்பது ஆறுதல் பரிசுகள்

அன்பளிப்பு; ஐந்து ரூபா மட்டுமே

யா/வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம். பழையமாணவர் சங்கம்

06037

# வடக்குப் பாதையும் வாடும் பயணிகளும்

வடக்கு, கிழக்கிற்கும் கொழும்பிற்குமிடையிலான புகையிரத சேவைகள் தற்பொழுது ஓரளவு முன்னேற்றமடைந்து வருகின்றன. இருப்பினும் பயணிகளின் தேவைகளை முற்றுமுழுதாக பூர்த்தி செய்யுமளவிற்கு திருப்தியான சேவை இன்னும் கிடைக்கவில்லை என்றுதான் கூறவேண்டும்.

முன்னைய காலங்களிலே காங்கேசன்துறைக்கும்—கொழும்புக்கோட்டைக்குமிடையில் நான்கு சோடிப் பயணிகள் புகையிரத சேவைகள் நாளாந்தம் நடத்தப்பட்டன.

காலையில் யாழ் தேவி, நண்பகலில் உத்திர தேவி, மாலையில் தபால் புகையிரதம் என்பவற்றுடன் 'செவன்ரீன் அப்' என அழைக்கப்பட்ட பயணிகள் — பொதிக்கலப்பு புகையிரதமும் சேவையில் ஈடுபட்டிருந்தன.

பிற்காலங்களில் மக்களின் வளர்ந்து வரும் தேவைக்கேற்ப 'இன்ரசிற்றி' என்ற சொகுசு கடுகதிப் புகையிரதமும் இரவுநேரம் மற்றொரு கடுகதிப் புகையிரதமும் அவ்வப்போது சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

இத்தனை புகையிரதங்கள் வடக்குப் பாதையில் சேவையில் ஈடுபட்டிருந்த போதிலும் அவற்றில் பயணிகள் தொகை நிரம்பி வழிந்தது. இதனால் புகையிரத திணைக்களத்திற்கு வடக்குப்பாதையில் பெருமளவு இலாபமும் கிடைத்தது.

ஆனால் இன்று மக்களின் தேவைகவ், பிரயாணங்கள் அதிகரித்துள்ள நிலையிலும் யாழ், தேவி தபால் புகையிரதம் ஆகிய இரண்டுமே நாளாந்தம் சேவையாற்றுகின்றன. முன்பு ஆறுசோடி புகையிரதங்கள் சேவையிலீடுபட்ட காலத்திலேயே மக்கள் தொகை நிரம்பி வழிந்த போது, இன்று மக்களின் பிரயாணத் தேவைகள் அதிகரித்த நிலையில் வடக்குப்பாதையிலிலே வடக்குப் பாதையிலேயே தினமும் அதிகளவு பயணிகள் பயணம் செய்கிறார்கள், அதிக வருமானத்தை ஈட்டித்தருவதும் வடக்குப்பாதைதான். ஆனால் குறைந்த அளவு புகையிரத சேவையும் நடைபெறுவதும் இந்த வடக்குப் பாதையில்தான்.

புகையிரதத்திணைக்களம் வருமானமற்ற தென் இலங்கையின் ஏனைய பாதைகளில் நாளுக்குநாள் புதிய சொகுசு சேவைகளை நடாத்தி நட்டத்தை அனுபவிக்கின்றபோதிலும், பன்மடங்கு இலாபத்தை ஈட்டித்தரும் வடக்குச் சேவைக்குப் புகையிரதங்கள் போதுமென்று நினைப்பதுவும் ஒருவகை புறக்கணிப்பு என்பதையே நமக்குத்தெளிவாக்குகின்றது.

வடக்குப்பாதையின் கொழும்பிற்கான சேவையைப்பற்றிக் குறிப்பிடும் அதேவேளையில் முன்னைய காலங்களில் பளைக்கும் காங்கேசன் துறைக்குமிடையே நடைபெற்ற உள்ளூர் புகையிரத சேவைகளை இதுவரையும் மீண்டும் ஆரம்பிக்க முயற்சிக்கப்படவில்லை. இந்த சேவைகளை நடாத்துவதற்குரிய சகல சூழ்நிலைகளும் உருவாகியுள்ள போதிலும் புகையிரதத்திணைக்களம் இதுவிடயத்தில் அக்கறையற்று இருப்பது மாற்றான்தாய் மனப்பான்மையைக் காட்டுவதாய் உள்ளது.

மேலும் வடக்குப் பாதையின் புகையிரத நிலையங்கள் பலவற்றில் குடிநீர்க் குழாய்கள் இருக்கின்றபோதிலும் குடிநீர் இருப்பதில்லை என்பது பயணிகளின் மற்றுமோர் குற்றச் சாட்டாகும். இரவில் அனேக புகையிரத மேடைகள் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன.

புகையிரதப் பகுதிக்கு 70 சதவீதமான இலாபத்தை ஈட்டிக் கொடுக்கின்ற வடக்குப் பாதைப் புகையிரத சேவைகள் விஸ்தரிக்கப்பட்டு, வசதிகள் மெருகூட்டப்படுகின்ற காலத்தை வடக்குப் பாதைப் பயணிகள் ஏக்கத்துடன் எதிர்பார்க்கிறார்கள். இவர்களது ஈனக்குரல் போக்குவரத்து அமைச்சர், போக்குவரத்து இணை அமைச்சர், புகையிரதத் திணைக்கள அதிகாரிகள் காதில் கேட்குமா?

# இதயநாதம்

புதன்கிழமை 06-06-1990

## நல்வாக்கு

மழையில்லாப்பருவத்து மேகங்கள்பேரோசை செய்கின்றன. ஆனால், அவை மழை பொழிவது இல்லை. மழைக் காலத்து மேகங்களோ ஒரு பேச்சும் பேசாமல் பூமியை வெள்ளக் காடாகச் செய்து விடுகின்றன.

—சுவாமி விவேகானந்தா

## ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தினமும் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற இரண்டு புகையிரதங்கள் எந்தளவிற்கு மக்களிற்கு போதுமானதா என்பதை கற்பனை செய்யவே மனம் சங்கடப்படுகின்றது.

நிற்பதற்குக்கூட இடமின்றி பயணிகள் வடக்குப்பாதை புகையிரதங்களில் பயணம் செய்கின்ற காட்சி எம் மனதை நெருடுகின்றது. சுமார்- கிலோ மீற்றர்கள் அல்லது 9 மணித்தியாலப் பிரயாணத்தை நின்று கொண்டே மேற்கொள்ளுவது இலகுவான காரியமல்ல.

முன்னையகாலங்களில் கொழும்பில் தொழில் செய்வோரும், உத்தியோகத்தர்களுமே பொதுவாக புகையிரதத்தைப் பயன்படுத்தி வந்தார்கள். ஆனால் இன்று உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், வெளிநாடு செல்ல ஏற்பாடுகளை மேற்கொள்வோர் வெளிநாடுகளில் உள்ள உறவினர்களுடன் தொடர்பு கொள்ளச் செல்வோர் என்று பலவகையான தேவைகளுடன் பயணம் செய்வோரைக் காண்கின்றோம்.

இலங்கையில் உள்ள புகையிரதப்பாதைக

# கலைஞரின் புகழுக்கு திருஷ்டிப் பரிகாரம் போல்

# தனயன் முத்து;ஸ்டாலின்மீது காழ்ப்புணர்ச்சி?

கே. வி. ஆர். ஸ்ரீ

தமிழக அரசில் இன்னோரன்ன தொல்லைகள் சூழ்ந்த நிலையே காணப்படுகின்றது.

முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உதவினார். மாநிலத்தில் ஸ்திரமின்மையை உருவாக்குகிறார் என்றவாறாக எதிர்க்கட்சிகள் எப்படியும் அவரது ஆட்சியைக் கவிழ்த்துவிடக் கங்கணம் கட்டி நிற்கின்றன.

ஆயினும் களம் பல கண்ட கலைஞரோ இதற்கெல்லாம் மசிந்துவிடுவதாக இல்லை. 'இந்திய இராணுவம் இலங்கையில் இழைத்தது அநீதிதான். எனத் தொடர்ந்து அடித்துச் சொல்லி வருவதுடன் பதவி துறக்க நேரிட்டாலும் என் நிலை மாறாது என்று உறுதியுடன் இருக்கின்றார்.

கலைஞருக்கு அவமானமும் சிக்கலும் அவரது மகன் மு. க. முத்து ரூபத்திலும் வர முனைகின்றது. கலைஞர் தனது மற்றொரு மகனான மு. க. ஸ்டாலினுக்கு அளித்துள்ள அரசியல் முக்கியத்துவம் கண்டு பொருமும் முத்து தந்தைக்கு எதிராகச் செயற்பட எம். ஜி. ஆரின் அண்ணன் எம். ஜி. சக்கரபாணியின் மகள் லீலாவதியையும் சேர்த்துக் கொண்டுள்ளார் என்று தமிழகத்திலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லீலாவதி எம். ஜி. ஆர் சுகவீனமுற்றவேளை அவருக்கு மாற்றுச் சிறுநீரகம் கொடுத்துதவியவர் என்பது தெரிந்ததே.

தி. மு. க அவரைத் தன்னுடன் இணைத்து பின் சமீபத்தில் அவரை கழகத்திலிருந்து விலக்கிவிட்டது.

முத்துவுடன் லீலாவதியும் இணைந்து இந்திரா காங்கிரஸ் அ. தி. மு. க கூட்டணியில் சேர்ந்து கொள்ள முற்பட்டார்கள். தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி இதற்குத் துணைபோக முனைந்தார். விடயத்தைக் கேள்வியுற்ற ஜெயலலிதா லீலாவதி தொடர்பே அரசியலுக்கு வேண்டாம் என்று ஒரேயடியாக சமாச்சாரத்திற்கு முத்தாய்பு வைத்து விட்டாராம்.

இப்போது முத்துவும், லீலாவதியும் டில்லிக்குச் சென்று ராஜீவ் காந்தியை எப்படியும் சமாளித்து இந்திரா காங்கிரஸில் சேர்ந்து கொள்ளப் பகீரதப் பிரயத்தனம் மேற்கொள்வதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

கலைஞரின் மகன் முத்துவின் கடந்தகால சொந்த வழ்க்கையும் மதிப்பு உள்ளதாக இருக்கவில்லை என்பதனையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். எம். ஜி. ஆர் பாணியில் ஒப்பனை செய்து ஏழையின் சிரிப்பில் இறைவன் இருப்பதைச் சொன்னான் தலைவன். அண்ணன் அவன் சொல்லிய சொல்லை நான் எந்நாளும் மறந்தது இல்லை என்று பாடி திரைப் படங்களில் கதாநாயன் வேடமேற்றும் அவரால் சோபிக்க முடியாது போய் விட்டது.

அத்துடன் நடிகர் விஜயகுமாரின் மனைவி நடிகை மஞ்சுளாவின் கரத்தைப் பிடித்து இழுத்ததாகத் தேனாம்பேட்டைப் பொலிஸில் செய்யப்பட்ட புகார் அவரைச் சந்திக்கு இழுத்து மானத்தை வாங்கிவிட்டது.



முதல்வர் கலைஞருக்கு 'ராஜ ராஜன்' விருதும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பல பெருமை சேர்க்கும் பட்டங்கள் அவரைக் கௌரவிக்கின்றன.

இத்தகைய பெருமை சேர் நிலையில் சிறுமை சேர்க்கவென்றே வந்தவர்போல் அவரது தனயன் மு. க. முத்து காட்சியளிக்கிறார்.

தந்தைக்கு அவர் ஆற்றும் உதவிகண்டு தமிழகமே வெட்கித் தலைகுனிகிறது.

கலைஞருக்கு புகழ் மலைபோல் குவியும்வேளை தனயன் வடிவத்தில் இப்படி தொல்லை,அவமானம் விளைவதை திருஷ்டிப் பரிகாரம் என்று எடுத்துக் கொள்ளலாமா?

# உங்களுக்கு வயதாகி விட்டதா?

# கண்டுபிடிக்க சிலயோசனைகள்

**உங்களுக்கு வயதாகி விட்டதா? அதனை எப்படிக் கண்டு பிடிப்பது? இதோ சில உருப்படியான யோசனைகள்.**

எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும் மனதிற்கு தேவைனயாகவே இருக்கிறது. வேதனை தராத காரியங்கள் ஒன்றும் உருப்படியாவதுமில்லை.

உங்களது Bifocal கண்ணாடியில் விழுகின்ற சூரியனின் ஒளியே உங்களது கண்களில் பளிச்சிடுகின்றன.

முந்தின இரவில். இருந்த மன நிலைதான் இப்பொழுதும் இருக்கிறது. மாற்றம் எதுவுமேயில்லை.

உங்களது பிள்ளைகள் நடுத்தர வயதடைந்து விட்டவர்கள் போன்று காட்சியளிக்கின்றார்கள்.

ஏணியின் உச்சிக்கு ஏறிய பிறகே அது தவறான சுவரின் மீது சாய்ந்துகொண்டிருப்பதை அறிகிறீர்கள்.

''ஹெல்த் கிளப்''பில் எப்படியோ சேர்ந்து விட்டீர்கள். ஆனால் இன்னும் ஒரு முறை கூட அங்கு செல்லவில்லை.

எதையும் தள்ளிப்போட எண்ணுகின்றீர்கள், ஆனால் அதை இதுவரை செய்யமுடியவில்லை.

உங்களுக்கு எல்லா விடைகளும் தெரியும். ஆனால் யாரும் ஏனோ எந்தக் கேள்வியையும் உங்களிடத்தில் கேட்பதில்லை!

''டல்லான''மாலைவேளையையே எதிர்நோக்கியிருக்கின்றீர்கள்.

உங்களது Bifocal கண்ணாடிக்கு உங்களை நன்றாகப் பழக்கப் படுத்திக் கொள்ள வேண்டுமென்று தலையை நிமிர்த்தி நடக்கின்றீர்கள்.

நாளிதழில் ''25 ஆண்டுகட்கு முன்னர்'' என்ற பகுதியையே தேடிப்பிடித்து வாசிக்கின்றீர்கள்.

விளக்குகளை அணைக்கின்றீர்கள் சிக்கன நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே, வேறு எதற்கும் அல்ல!

ஆடும் நாற்காலியில் அமர்ந்திருக்கின்றீர்கள், ஆனால் நாற்காலி என்னவோ ஆட மறுக்கின்றது.

உங்களது மூட்டுக்களில் ''சடக்'' ஒலி வெளிப்படுகின்றது.

உங்களது பெல்டை சரியாக மாட்ட முடியாமல் தவிக்கின்றீர்கள்.

உங்களது கழுத்தைச் சுற்றிலும் பதினேழு அங்குலம், உங்களது இடுப்பைச் சுற்றிலும் நாற்பத்திரண்டு அங்குலம்.

முன்னைப்போல, வரப் போகும் பிறந்த நாளை ஆவலுடன் எதிர்பார்ப்பதை நிறுத்தி விட்டீர்கள்.

என்ன தாத்தா, எப்படி இருக்கின்றீர்கள் என்ற கேள்வியைக் கேட்டு அதிர்ச்சி அடைகின்றீர்கள்.

நேற்றுத்தான் உங்களது திருமணநாள், ஆனால் இன்று தான்நினைவுக்கு வருகின்றது.

சகிப்புத் தன்மையற்ற ஆட்களைக் கண்டால் உங்களுக்கு பிடிக்கிறதேயில்லை.

# செய்தி மஞ்சரி

## குறைந்த விலையில் பசளை

விவசாய ஓய்வூதிய'த் திட்டம் அல்லது விவசாய காப்புறுதித் திட்டம் என்பனவற்றில் அங்கத்தவர்களாக இருக்கும் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் பசளை வகைகள் பெற்றுக் கொடுக்கப்படும் என விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித் துறை ராஜாங்க அமைச்சர் அறிவித்துள்ளார். (7கி)

## தரம் குறைந்த மா

பாவனைக்கு உபயோகிக்க முடியாத மா முல்லை மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தால் மாங்குளம் உணவுக்களஞ்சியத்திலிருந்து வழங்கப்படுகிறது.

சம்பந்தப்பட்'ட திணைக்களத்தின் கவனக் குறைவினால் பல. நோ. கூ. சங்கங்கள் இந்தத் தரம் குறைந்த மாவையே இப்பகுதி மக்களுக்கு விநியோகித்து வருகின்றதென தெரிய வருகின்றது.

## ஸ்ரீமத் சுவாமி நினைவாக

மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனில் நீண்டகாலம் பணியாற்றி மகாசமாதி அடைந்த ஸ்ரீமத் சுவாமி நடராசானந்தாவின் நினைவாகப் பல பொது'ப்பணிகளை மேற்கொள்ள ''சித்தாண்டிக்குடி சுவாமிநடராசானந்தா சங்க இல்லம்'' நடவடிக்கை எடுத்து வருகிறது. மேற்படி இல்லதுக்கு வந்தாறுமூலையில் கட்டிடம் ஒன்று நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## உல்லாசத்துறையில் பயிற்சி

இளைஞர் யுவதிகளுக்கு உல்லாசப் பயணத்துறை தொடர்பாக பயிற்சிகள் அளிக்க தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையுடன் இணைந்து திட்டமிட்டுள்ளது.

மேலைத்தேய உணவு வகைகள் தயாரித்தல் ஹோட்டல் பராமரிப்பு, உபசார சேவை வரவேற்பு ஆகிய துறைகளில் பயிற்சி வழங்கப்படும்.

## பணம் இல்லை; தொகை கூடும்

வழங்கப்பட்டு வந்த ஊக்குவிப்புப் பணம் இடை நிறுத்தப்பட்டதன் விளைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் குடும்பக் கட்டுப்பாட்டில் அறுவை சிகிச்சை செய்வோரின் தொகை குறைந்துள்ளது.

1988-ம் ஆண்டில் 1200 பேர் இவ்வகை சிகிச்சையினைப் பெற்றனர். ஆனால் 1989-இல் 700 பேர்கள் மட்டுமே சிகிச்சை பெற்றுள்ளனர் என மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## வடக்கில் முதல் முதலாக,.

நம்பிக்கை நிதிய விபத்துக் காப்புறுதிக் கொடுப்பனவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கொடுப்பனவு முதன் முதலாக வல்வெட்டித்துறை வாசி ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்திய படையின் து பாக்கிச் சூட்டுக்கு இலக்காகித் தனது இரு கால்களையும் இழந்த எஸ். மரியநாயகத்திற்கு கொழும்பில் நடைபெற்ற ஓர் எளிமையான வைபவத்தின் போது கொடுப்பனவுக்கான காசோலையாக 33.660 ரூபா வழங்கப்பட்டது.

இவர் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் ஊழியர் நம்பிக்கை நிதியக் காப்புறுதியின் கீழ் விபத்துக் கொடுப்பனவுகளைப் பெற தகுதி பெற்றிருந்தார். (7.கி)

## டிசம்பர்வரை மாற்றமில்லை

இவ் வருட டிசம்பர் மாதம் வரை இலங்கை மத்திய போக்கு வரத்து சபை தொடர்ந்தும் ஒரு நியதிச் சபையாகவே இயங்கும்.

மக்கள் மயப்படுத்தும் திட்டம் யூன் 1 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் என முன்னர் அறிவக்கப் பட்டிருந்தது.

இத் திட்டம் தொடர்பாக ஆராய உலக வங்கியின் கீழ் ஒரு விசேடகுழு நியமிக்கப் பட்டது இக் குழுவின் அறிக்கை. இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. இதனால் அத்திட்ட அறிக்கை கிடைக்கும் வரை எவ்வித மாற்றமும் இன்றி இ. மபோ. ச. அப்படியே தொடர்ந்தும் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## சமூகமளிக்காவிடில்சம்பளம்இல்லை

மேலதிகமாக பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் இடமாற்ற உத்தரவு கிடைத்ததும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குச் செல்லாது இருக்கும் பட்சத்தில்அவர்களின் சம்பளம் இடைநிறுத்தப் படும்.

சில மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் அதிகமான ஆசிரியர்கள் மேலதிகமாக கடமை ஆற்றுவதாக கல்வி அமைச்சு நடத்திய மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர் வரும் ஆகஸ்ட் மாதத்திற்கு முன் சகல பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக் குறையை நீக்குவதற்கு அமைச்சினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலே பாடசாலைகளின் ஆசிரியர்களைப் பற்றி மதிப்பீடு நடத்தப் பட்டது

---

கொழும்பில் நடைபெறும்

## தமிழ்மொழி தின விழாவில் 1000மாணவர் பங்குபற்றுவர்

இம்மாதம் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை ரீதியிலான தமிழ்மொழித் தினத்தில் பங்கு பற்றுவதற்கு வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதியிலிருந்தும் ஆயிரம் மாணவர்கள் வரை கொழும்பு செல்லவுள்ளனர்.

தமிழ் மொழித் தினக் கொண்டாட்டத்திற்காக கல்வி அமைச்சு 60 ஆ'யிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது இதில் 40 ஆயிரம் ரூபா மாகாண ரீதியில் தமிழ்த் தினப் போட்டிகளுக்கு செலவிடப்பட்டுள்ளது.

மிகுதியாக இருக்கும் 20 ஆயிரம் ரூபா விழா நடத்துவதற்குப் போதாமையினால் சிறபபிதழ் ஒன்றை வெளியிட்டு நிதி திரட்ட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெறவுள்ள இறுதி விழாவில் பங்குபற்றும் மாணவர்கள் இம்மாதம் 14 ஆம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு வந்து சேர வேண்டும் என அறிவிக்கப்பட்டுவளது.

இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கு 30 தங்கப்பதக்கங்கள் வழங்கப்படும்

போட்டியில் வெற்றிபெற்று முதல் இடத்தைப் பெற்ற அனைவரும் அகில இலங்கை ரீதியாக நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு வரும் மாணவர்களுக்கு பிரயாண, தங்குமிட உணவு மற்றும் பாதுகாப்பு வசதிகள் யாவும் வழங்கப் படும்.

இத்தகைய விழாக்கள் இனித் தொடர்ந்து வருடா வருடம் கொண்டாடப்படும் எனவும் இவ் விழாக்களின் மூலம் சேரப்படும் நிதி பின்தங்கிய பாடசாலைகளின் அபிவிருத்திக்குப் பயன் படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்யட்டுள்ளது. (7கி)

## புதிய சாதனை வீரருக்கு முன்னையவர் பரிசு வழங்கினார்

அண்மையில் சுகததாச விளையாட்டரங்கில் வீரர் எதிர்வீரசிங்கத்தின் உயரம் பாய்தல் சாதனையை முறியடித்த மைச்சிமஸ் பெனாண்டோவிற்கு 100 அமெரிக்க டோலர்களை எதிர்வீரசிங்கம் பரிசாக அனுப்பியுள்ளார்.

இப்பணம் அவரின் சகோதரன் இராஜசிங்கத்திற்கு அனுப்பப்பட்டு அவர் மூலம் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது.

உயரம் பாய்தலில் எதிர்வீரசிங்கம் ஏற்படுத்திய சாதனை தற்பொழுதுதான் வீரர் மைச்சிமஸ்பெனாண்டோவினால் முறியடிக்கப்பட்டது.

வீரர் எதிர்வீரசிங்கம் தற்பொழுது அமெரிக்காவில் வசித்து வருகின்றார். (கி)

## பயிலுநர் ஆசிரிய நிர்வாகக்குழு சந்திப்பு

யாழ் மாவட்ட பயினர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எதிர்வரும் வியாழக்கிழமை காலை யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள யாழ்மாவட்ட பயிலுநர் ஆசிரிய சங்க இணைப்பதிகாரி திரு நா தணிகாசலம்பிள்ளையுடனான கலந்துரையாடலுக்கு சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## 'நல்ல உள்ளம் இருந்தால் இறைதிருவருள் கிட்டும்'

'திருவாசகத்தில் வரும் அடைக்கலப் பத்து மிகவும் சிறப்பு அம்சம் பெற்றது. எமது உடம்பை ஏன் பெற்றோம்? அதன் மகத்துவத்தை நாம் செயலில் செய்து காட்ட வேண்டும். திருவாசகம் சுவாமிகள் இதனை நன்கு உணர்த்தி உள்ளார் சுவாமியின் சிறந்த வாழ்க்கை நெறியை நாமனைவரும் பின் பற்றி வாழ வேண்டும்.

இவ்வாறு யாழ். ப கலைக் கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் கலாநிதி ப.கோயில கிருஷ்ணன் 'திருவாசகம்' ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் நினைவு விழாவில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

தொண்டமானாறு செல்வச் சந்நிதியின் ஆச்சிரமத்தில் இந் நினைவு விழா நடைபெற்றது. கலாநிதி கோபாலகிருஷ்ணன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

'திருவாசகம் ஆத்மீகத் தன்மை வாய்ந்தது. திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் திருவாசகத்தையே தனது ஆத்மீக நெறியாகக் கொண்டு பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாத்தவர். நல்ல உள்ளம் உடைய அடியார்களிடம் இறைவனுடைய திருவருள் உண்டு.

தேனில் மகத்துவம் எப்படி உண்டோ. அது போன்றே எமது சமயத்திலும் எவ்வளவோ ஆத்மீகப் பலம் உண்டு.'

இந் நினைவு விழா திருகரவைக் கிழார் தலைமையில் நடைபெற்றது. யாழ். திவ்ய ஜீவன சங்கத் தலைவர் சட்டத்தரணி திரு.சி. கனகரத்தினம் சிறப்புரையாற்றினார். சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகி திரு. செ. மோகனதாஸ் திருவாசகம் சுவாமிகள் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார். (36-கி)

## சுன்னாகம் பொது நூலகத்திற்கு புதிய நூல்கள் கிடைத்தன

(உடுவில்)

சுன்னாகம் பொது நூலகம் நடப்பு வருடத்திற்கென இருபதாயிரம் ரூபாவிற்குப் புதிய புத்தகங்களைக் கொள்வனவு செய்துள்ளது.

அத்துடன் ஆசிய பவுண்டேசன் அறுபது புத்தகங்களையும், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் இருநூறு புத்தகங்களையும் வழங்கியுள்ளன. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உள்ளூர் வெளியீடுகள், பாடப் புத்தகங்கள் என்பவற்றையும் பொது நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

கடந்தகால வன்செயல்களால் சுன்னாகம் நூலகத்திலிருந்து எண்ணாயிரம் புத்தகங்கள் காணாமற் போயுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ப-2 கி)

## அரியாலையில் கலைப்போட்டி

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 39—வது ஆண்டுவிழா அடுத்த மாதம் ஏழாம் திகதி நடைபெறவிருக்கின்றது கலைப் போட்டிகள் இம்மாதம் 9—ந் திகதி தொடக்கம் 17—ம் திகதி வரை நடைபெறும்.

கட்டுரை, கவிதை, சமய அறிவு, பொதுஅறிவு, சிறுகதை எழுதுதல், தமிழ்ப் பேச்சு, கிராமிய சம்பாஷனை, ஆங்கிலப் பேச்சு ஆகியன நடைபெறும்.

விழாவின் இறுதி நாளன்று நிலைய மாதர் சங்கத்தின் ''கண்டியம்பதிக் காவலன்'' என்னும் நாடகமும், நிலைய இளைஞர்களின் 'அலைகள்' என்னும் நாடகமும் இடம் பெறுகின்றன. (33.கி)

வாங்க வேண்டாமென எச்சரிக்கை

## உடல்நலத்திற்கு கேடான யூஸ் வவுனியாவில் தாராள விற்பனை

வவுனியாவில் விற்பனையாகும் கலர் ஊட்டப்பட்ட யூஸ் உடல் நலத்திற்கு கேடானது என வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இங்கு பரவலான, குறிப்பாக பாடசாலை வாசல்களில் வைத்து கலர் ஊட்டப்பட்ட யூஸ் விற்பனை செய்யப்படுகின்றது.

தரமற்ற உடல் நலத்திற்கு தீங்கான கலர் பவுடர் சீனி, நீர் என்பன சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்டது இந்த யூஸ்.

பொலித்தீன் உறைகளில் இது அடைக்கப்பட்டு குளிர் சாதனப்பெட்டியில் வைக்கப்பட்டு உறைந்ததும் விற்பனை செய்யப்படுகின்றது.

குறிப்பாக பாடசாலை மாணவர்களே இதனை வாங்கி பருகுகின்றனர் என அந்த அதிகாரி குறிப்பிட்டார், (11கி)

## பொங்கல் விழா

காரயம்பதி முகாவில் திரியாய் அம்மன் பொங்கல் விழா எட்டாம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்று பகல் விஷேட ஆராதனைகளும் அன்னதானமும் நடைபெறவுள்ளது. (43கி)

### யாழ் பல்கலைக்கழகத்தில் பிரிட்டிஷ் உதவியுடன்

# பூரண கம்பியூட்டர் துறை; பிரிட்டிஷ் குழு யாழ் விஜயம்

யாழ். பல்கலைக்கழகத்தில் கம்பியூட்டர் துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கம்பியூட்டர் விஞ்ஞானத்தை ஒரு கற்கை நெறியாக போதிக்கக் கூடியதாக கம்பியூட்டர் விஞ்ஞானத்துறையை உருவாக்கப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அங்கீகாரமளித்துள்ளது. கம்பியூட்டர் விஞ்ஞான கற்கை நெறிக்கு ஆயிரத்தித் தொழாயிரத்தித் தொண்ணூற்றியிரண்டாம் ஆண்டில் ஐம்பது மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்களென பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்ட முதல் ஐந்து வருடங்களிலும் வெளிநாட்டு விரிவுரையாளர்களின் உதவியும் விரிவுரையாளர் பயிற்சி, புத்தகங்கள், உபகரணங்கள் ஆகியவற்றிற்கும் உதவிகள் தேவைப்படும். வெளிநாட்டு பல்கலைக்கழக மொன்றுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொள்வது மூலம் இவற்றைப் பெற்றுக்கொள்ள பல்கலைக் கழகம் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

பிரிட்டிஷ் பல்கலைக்கழக மொன்றுடன் கம்பியூட்டர் துறையில் இணைப்பினை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளைப் பல பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களின் கம்பியூட்டர் துறைப் பேராசிரியர்களுடனும் பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனத்துடனும் மேற்கொள்ள யாழ் பல்கலைக்கழக கம்பியூட்டர்துறை இயக்குநர் பேராசிரியர் குமாரவடிவேல் கடந்த பெப்ரவரி மாதம் பல பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

அச்சமயம் பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் கம்பியூட்டர் துறையில் யாழ்ப்பாணம் காடிவ் இணைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. இத்திட்டத்தின் மொத்தச் செலவு நான்கு கோடி ரூபாவாகும். இவ்வுதவியைத் தர பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனம் அக்கறை கொண்டுள்ளது.

பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனத்தினால் கம்பியூட்டர் துறையில் உயர் கல்விக்கு வழங்கப்படக்கூடிய உதவிகள் பற்றி ஆராய இருநபர் மீளாய்வுக் குழுவொன்று இலங்கைக்கு இருவார கால விஜயம் மேற்கொண்டு வந்துள்ளது. இக்குழு இன்று யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்யும்.

இக்குழுவில் பிரிட்டிஷ் தென்மேற்கு பிராந்திய கம்பியூட்டர் தொகுதிகளின் இயக்குநர் பேராசிரியர் ஜோன் கிலேற்றர், ஆக்ஸ்போட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜொனாதன் டாபி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களுடன் பிரிட்டிஷ் கவுன்சில் அதிகாரி ஜோன் பெயினும் வருகை தருகிறார்.

யாழ்ப்பாணம் காடிவ் இணைப்புத் திட்டம் யாழ். பல்கலைக்கழகத்தின்பிரதான கோரிக்கையாக இக்குழுமுன் முன்வைக்கப்படுமெனப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. இத்திட்டம் அமுலாக்கப்படின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பூர்ணத்துவமுடைய ஒரு கம்பியூட்டர் துறையைக் கொண்டிருக்கும்.

கம்பியூட்டர் துறையின் உபயோகத்திற்காக இரு விரிவுரை மண்டபங்களை கம்பியூட்டர் ஆய்வு கூடங்களாக மாற்றும் வேலைகள் ஏற்கனவே பத்து இலட்ச ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்தியாவசிய உபகரணங்கள் வாங்குவதற்கு பல்கலைக்கழகம் ஆறு இலட்ச ரூபாவை ஒதுக்கியுள்ளது. பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனம் வழங்கும் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் சுமார் நாற்பது இலட்ச ரூபா பெறுமதியான கம்பியூட்டர் உபகரணங்கள் அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வந்து சேருமெனவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (கி)

## சுபதினங்கள் வந்து போயும் தவம் இன்னும் கலையவில்லை

சைவத்தையும், தமிழையும் போற்றி வளர்த்த நாவலர் பெருமான் கண்ணிழந்த நிலையிலே கடந்த நான்கு வருடங்கட்கு மேலாகத் தவமிருந்து வருகிறார். கோப்பாயில் நாவலர் பெருமானால் கட்டப்பட்ட நாவலர் இந்துத் தமிழ் கலவன் வித்தியாலயத்தின் முன்புறத்தில் இவரது சிலை திறக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இது பற்றி ஏற்கனவே 'முரசொலி'யில் குட்டிக்காட்டியமைக்கு நடவடிக்கை எடுக்க முன் வந்த யாழ் மாவட்டக் கல்விப்பணிபாளர் இவ் வித்தியாலய அதிபருக்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கும் பாடசாலை ஆரம்பமாகி முதல் வரும் நன்னாளில் சிலையைத் திறக்கும்படி கடிதம் அனுப்பியிருந்ததாவும் சுட்டிக் காட்டப் பட்டிருந்தது.

பாடசாலை இரண்டாம் தவணைக்காக ஆரம்பமாகிய பின்னர் இன்று வரைஎத்தனையோ சுபதினங்கள் கடந்து விட்டன ஆனால் சம்பிரதாயப்படி கண் பெற்று ஒளி வீசட அந்த உத்தமரின் சிலைக்கு இதுவரை சுபதினம் வரவில்லை. (23-கி)

## வவுனியா பொதுநூலகர் புதிய நூல்கள் கொள்வனவு

வவுனியா நகரசபையின் நூல் நிலையத்திற்கு மேலும் புத்தம் புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

நகரசபையின் நிதியிலிருந்து முப்பதாயிரம் ரூபாவிற்கு நூல்களை கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என நகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

என்ன வகையான நூல்கள் பெறுவது பயன் மிக்கது. என்ற விடயத்தினை வவுனியா நூலகர் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றார்.

பொதுமக்கள், ஆசிரியர்கள், கல்வி மான்கள், மாணவர்கள் தமது ஆலோசனையினை தெரிவிக்க முடியும்

காலதாமதமின்றி சம்பந்தப்பட்டவருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை சமீபத்தில் அமெரிக்க நிறுவனமான ஏசியா பவுண்டேசன் மிகவும் பயன்மிக்க நாற்பது நூல்களை இந்த நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இவற்றின் பெறுமதி சுமார் ஐயாயிரம் ரூபா என மதிப்பிடப்படுகின்றது. மேற்படி நூலகர் எம். சண்முகநாதன் இவற்றை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (11 கி)

## முதலாளிகளுக்கும ஜனசவிய! குறைந்தவிலை சேமிப்பு அட்டை

''ஜனசக்தி'' திட்டம் மூலம் நன்மை பெறும் பலர் தமது பெயரில் தபாற்கந்தோரில் உள்ள சேமிப்பு அட்டைகளை பெற்று குறைந்த விலையில் விற்பதாகத்தெரியவருகிறது.

450 ரூபா பெறுமதியான சேமிப்பு அட்டைகளை சில முதலாளிமார் 300 ரூபா கொடுத்து வாங்குகிறார்களாம்.

கையில் பணத்தை பெற்ற அம்மக்கள் அனாவசிய செலவுகளில் ஈடுபடுகிறார்களாம்.

ஜனசக்திதிட்டத்தால்ஏழைகளை விட சில முதலாளிமார்களே அதிக நன்மை பெறுவதாகக் கூறப்படுகிறது. (05)

## கடல் எல்லைக்குள் நுழைந்த 30மீனவர்விடுதலைப்புலிகளிடம்

நேற்று முன் தினம் ஐந்து படகுகளில் சென்ற முப்பது இந்திய மீனவர்களை விடுதலைப் புலிகள் யாழ். தீவகப் பகுதியில் தடுத்து வைத்திருப்பதாக கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

பாக்கு நீரிணைப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இவர்களை விடுதலைப்புலிகள் அழைத்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்தமை இது நான்காவது தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாளை சுதுமலை அம்மன் உற்சவம்

அருள்மிகு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோயில் தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை மாலை 3-00மணிக்கு நடைபெறும். தீர்த்தத் திருவிழா 8ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும்,

# விளையாட்டுச் செய்திகள்

## இளம் தென்றல் வெற்றி

வவுனியா — நொச்சிமோட்டை விவேகானந்த விளையாட்டுக் கழகம் நடத்திய 7வது வருட, நான்கு பேர் கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் புதிய சின்னக்குளம் இளம் தென்றல் விளையாட்டுக் கழகம் ''ஏ'' முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது.

2ம், 3ம், இடங்களை முறையே நொச்சிக்குளம் சிவா விளையாட்டுக் கழகம் ''ஏ'', நொச்சிக்குளம் சிவா விளையாட்டுக் கழகம் 'பி' பெற்றுக்கொண்டன.

பரிசில்களை வவுனியா உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ரி. நாகேஸ்வரன் வழங்கினார். ஓமந்தைப் பிரதேச விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகர் பிரசாத் விழாவினை ஆரம்பித்து வைத்தார்.

கழகக் கொடியினை வ. தெ த பிரிவுக் கூட்டுறவுச் சமாஜத்தின் பொது முகாமையாளர் ஏ. எஸ். பாரதி ஆனந்தன் ஏற்றினார். (11கி)

## மாகாண கிறிக்கட் போட்டி

கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சினால் நடாத்தப்படவிருக்கும் கிறிக்கட் போட்டிக்கு இம்மாதம் 15ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்க விரும்பும் கழகங்கள், பாடசாலைகள் விண்ணப்பப் படிவத்துடன் விண்ணப்பப் பணமாக 100/- (கழகங்கள்), 50/- (பாடசாலைகள்) செயலாளர் கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சு, திருமலை என்ற விலாசத்திற்கு மணி ஓடர் மூலம் அனுப்பி வைக்கவேண்டும்.

வெற்றி பெறும் கழகங்கள், பாடசாலைகளுக்கு மாகாண வெற்றிக் கேடயமும் விலையுயர்ந்த கிறிக்கட் உபகரணங்களும் வழங்கப்படும். கலந்து கொள்ளும் கழகங்களுக்கும் பாடசாலைகளுக்கும் தகுந்த சன்மானங்கள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (11கி)

## யாழ் வீரர்கள் கொழும்புசெல்வர்

(தாளையடி)

யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்ற வீரர்கள் வீராங்கனைகள் மட்டும் கொழும்பில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை ரீதியில் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சினால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றலாமென யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கே. ஏகாம்பரம் அறிவித்துள்ளார். (18)

## சம்மேளன போட்டிகள்

(விளையாட்டுத்துறை நிருபர்)

ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட சம்மேளனம் மாவட்ட லீக்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் முதற்கட்டமாக. எதிர்வரும் யூன் 16-ம் திகதி யாழ்மாவட்டக் கோஷ்டிக்கும் பருத்தித்துறை மாவட்டக் கோஷ்டிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி யாழ்நகரில் நடத்த உள்ளது.

இரண்டாவது கட்டப் போட்டி நெல்லியடியில் இடம் பெறும் என்று யாழ் உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் ஈ. கே. குமரையா தெரிவித்தார். (16கி)

## நெளுக்குளம் - சேரன் முதலிடம்

நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி சமீபத்தில் நடைபெற்றது.

சேரன் இல்லம் அதிககூடுதலான புள்ளிகளை பெற்று முதலிடத்தினை பெற்றுக்கொண்டது.

விழாவிற்கு பிரதம அதிதியாக புதுக்குளம் கொத்தணி அதிபர் திரு. எஸ். இராசரத்தினம் கலந்து கொண்டார்.

பாண்டியன் இல்லத்தினைச் சேர்ந்தவர்கள் விநோத உடைப்போட்டிக்கு இந்திய அமைதிப்படை போன்று உடை தரித்து வினோதமாக நடித்து இப்போட்டியில் முதலாம் இடத்தினைப்பெற்றுக் கொண்டார்கள். (11 கி)

## பரியோவான் வென்றது

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 16 வயதுக் குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்ற். யேம்ஸ் மகாவித்தியாலயக் கோஷ்டியும் யாழ். பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டியும் கலந்து கொண்டன. பரியோவான் கல்லூரிக் கோஷ்டி 2: 0 கோல்களால் வெற்றியீட்டியது. (27 கி)

## மைலோ போட்டிகள்

(விளையாட்டுத்துறை நிருபர்)

'மைலோ' ஸ்தாபனம் தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடத்தி வரும் உதைப்பந்தாட்டப் போட்டியில் ஓர் அங்கமாக கடந்த 12 ஆம் திகதி சென் ஹென்றீஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்ட போட்டியில் சென் ஹென்றீஸ அணி (யாழ்) சென்யேம்ஸ் அணியை எதிர்த்து மோதியது.

முதலில் இடம்பெற்ற 14 வயதிற்கு உட்பட்ட வீரர்கள் பங்கு கொண்ட போட்டியில் சென் யேம்ஸ் அணி 211 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. நடுவராக திரு. G. M செபஸ்தியாம்பிள்ளை கடமையாற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற 18 வயதிற்கு உட்பட்டவர்கள் பங்கு கொண்ட போட்டியில் சென் கென்றீஸ 3 க்கு பூச்சியம் என்ற கோல்கள் கணக்கில் பெற்றது, நடுவராக திரு. A. தேவராசா கடமையாற்றினார். (16 கி)

மட்டக்களப்பு மாவட்டத்தில்

# உதவி அரச அதிபர் பிரிவுகளில் கட்டிடபொருள் உற்பத்தி நிலையம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடமைப்புதிட்டங்களை துரிதப்படுத்துமுகமாக மாவட்டத்திலுள்ள பத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கட்டிடப்பொருள் உற்பத்தி நிலையங்களை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நிறுவவுள்ளது.

இதற்காண நடவடிக்கைகளைமட்டக்களப்பு மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முகமையாளர் கே. பத்மநான்எடுத்து வருகிறார்.

இந் நிலையங்களில் செங்கல் சூழைகள், மரத்தளபாடங்கள் என்பன உற்பத்தி செய்யப்பட்டு நியாயமான விலைக்கு வீடமைப் திட்டங்களுக்கு வழங்கப்படும் என திரு. பத்மநாதன் தெரிவித்தார்.

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுவரும் வீட்டுத்திட்டத்திற்கு இது பெரிதும் பயன்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (5-கி)

யாழ். பல்கலைக்கழகத்தில்

## சிறப்பு நெறி மாணவர்க்கும் உதவிப்பணம் கிடைக்கும்

யாழ். பல்கலைக்கழகத்தில் சிறப்புக் கற்கை நெறி பயிலும் மாணவர்களுக்கான உதவிப் பணக்கொடுப்பனவு நான்காம் வருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கல்வி உதவிப் பணம் தற்போது பெறத் தகுதி உடையவரும், சிறப்புக் கற்கை நெறிப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவருமாகிய மாணவர்களின் பெயர் விபங்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள அறிவித்தற் பலகையிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

தகுதியிருந்தும் எவராவது அந்தப் பெயயர் படிட்ப்பில் தமது பெயர் இல்லாவிடில்‘ உடன் நலன் சேவைகள் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளும்படியும் 1989 ஆம் ஆண்டில் நான்காம் வருடத்திற் கல்வி பயிலும், வர்த்தக வியாபார நிர்வா, நுண்கலை சித்த மருத்துவ மாணவர்களுக்கு ஏற்கனவே கல்வி உதவிப்பண அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், அவர்களுக்கு இது பொருந்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4கி)

## கட்புல சாதனை பயிற்சி நெறி

யாழ் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் ‘‘கட்புல சாதனங்கள் தயாரித்தல்,, என்னும் பயிற்சி நெறி சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் ஒன்பதாம் திகதி காலைஒன்பது மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது· (4கி)

## யோகசுவாமி ஜயந்தி

யோகசுவாமிகளின் 118வது ஜயந்தி கீரிமலை யோகசுவாமி மகளிர் தவநிலையத்தில் முன்னாள் மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபர் வ.செல்லையா தலைமையில் கொண்டாடப்பட்டது.

ஆத்மசோதித் தத்துவஞான நுாலாசிரியர் த.சத்தியதாஸன் சிறப்புச் சொற் பொழிவுகளை வழங்கினார் அன்றைய தினம் பூஜைகளும் ஆராதனைகளும் அடியார்களின் பஜனைகளும் இடம் பெற்றன. (கி)

## முறைசாராக்கல்வி சான்றிதழ்

1989ம்ஆண்டு முறைசாராக் கல்விப் பிரிவுகளில் யாழ் மத்திய கல்லுாரியில், ‘குளிரூட்டி இயந்திரம் திருத்துதலும் காற்றுப் பதனிடுதலும்’ என்னும் பயிற்சியை பயின்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் ஒன்பதாம் திகதி மாலை இரண்டு மணிக்கு கல்லூரி அதிபர் இராஜரட்ணம் தலைமையில் நடைபெறும். (4கி)

## நாய்களுக்கு தடை மருந்து

கிளிநொச்சி மாவட்டத்தில் நாய்களுக்கான தடைமருந்து ஏற்றப்பட்டு வருகிறது. கிளிநொச்சி சுகாதார வைத்தியதிகாரியின் ஏற்பாட்டில் வட்டக்கச்சி சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இம்மாதம் 13 ந்திகதி விசுவமடு தருமபுரம் பகுதியிலும் 14ம் திகதி புளியம் பொக்கணை கண்டாவளைப் பகுதியிலும் 18ம் திகதி வட்டக்கச்சிப் பகுதியிலும் தடைமருந்து ஏற்றல் இடம் பெறுமென வட்டக்கச்சி சுகாதாரத் தரிசிப்பாளர் க·இளங்கோ தெரிவித்துள்ளார்.

## பகவான் நினைவாக

(கல்வியங்காடு)

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா ஸ்வாமி என அறிவிக்கப்பட்ட ஐம்பதாவது ஆண்டு பூர்த்தியை கொண்டாடு முகமாக யாழ் மாவட்டத்தில் உள்ளஸ்ரீ சத்ய சாயி இல்லங்கள் இணைந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் உள்ள வார்ட்ஒன்றை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டன

இதில் ஸ்ரீ சாயி இல்லங்களை சேர்ந்த ஆண் பெண் அடியார்கள் பெருமளவில் கலந்து கொண்டானர். (கி)

## சுவையான செய்திகள்

### 71 ஐ விரும்பும் 26

ஜோன்னா என்ற 26 வயது இங்கிலாந்துப் பெண் தன் கணவரோடு மால்டா என்ற இடத்தில் வசிக்கிறாள். இப்போது இவள் ஆறுமாத கர்ப்பிணி இதில் என்ன அதிசயம் என்கிறீர்களா?

அவர் காதலன்நார்மனுக்கு வயது 71 என்பது தான் நார்மன் ஒரு பென்ஷனியர் அவரே தன் இலட்சியப் புருஷர் என்று கூறியிருக்கின்றார் 71 ஐ விரும்பும்.26

### மனைவியிடம் உதைபடும்...

கணவன் மனைவியிடையே நிலவும் தாம்பத்தியஉறவு பற்றி எடுத்த ஒரு கணக்கெடுப்புப்படி அமெரிக்காவில் 10 கணவர்களுக்கு ஒருவர் மனைவியிடம் உதைபடுபவராகக் காணப்படுகிறார். உதைவாங்குபவர்களில் இளம் மனைவியை உடைய வயதான கணவன் அல்லது மீறிய பலம் உடைய வயதான கணவன் அல்லது மீறிய பலம் உடைய பெண்ணை மனைவியாகப் பெற்ற கணவன் அல்லது உடல் ஊனம் உள்ள கணவன் ஆகியோரேஅதிகம் இந்தக் கணக் கெடுப்பின் போது பலர் தங்கள் சுய கௌரவத்தைமுன்னிட்டு தாங்கள் மனைவியிடம் உதை வாங்குவதில்லை. எனத் தெரிவித்துள்ளன. உண்மையை அவர்கள் தெரிவித்தால்அடிபடுபவர்களின்புள்ளி விபரத் தொகை இயக்கும் படியாக இருக்கும்.

### எரிக்கும் தறுவாயில் எழுந்த பெண்

அகமத் நகர் ஜில்லா பூனாவில் இருக்கிறது. இங்கு சமீபத்தில் ஓர் அதிசயம் நடந்துவிட்டது. இங்கு ஒரு பெண் இரண்டு நாள் உடல் நலமின்றி இருந்த பின்பு இறந்து விட்டதாக முடிவு கட்டி அவள் உடலை எரிப்பதற்காக எடுத்துச் சென்றுவிட்டார்கள். தீ மூட்டுவதற்கு முன்பு இந்தப் பெண்ணின் கணவர் அவள் வாயில் திடுமென தண்ணீர் ஊற்ற அப்பெண் எழுந்து உயிரோடு உட்கார்ந்து கொண்டாள். திடுக்கிட்ட எல்லோரும் அவளை எழுப்பி விட்டு அவளுக்குப் பதில் ஒரு கோழியைப் பிடித்து அதே சிதையில் வைத்து தீ மூட்டி விட்டார்கள். அப்படிச் செய்யாவிட்டால் தீவினை தொடரும் என்பது இங்குள்ள நம்பிக்கை.

### வயிற்றில் இருந்த நகம்

நாற்பது வயதான ஒரு ரஷ்யப் பெண்மணியின் வயிற்றிலிருந்து 130 நகங்களையும், 349 ஊசிகளையும் டாக்டர்கள் ஒபரேஷன் மூலம் எடுத்தனர். அவள் வயிற்றுவலி என்று வத்தபோது அவள் வயிற்றில் இவை இருப்பது எக்ஸ்ரே’ மூலம் கண்டு பிடிக்கப்பட்டது. அவை உட்கொண்டதற்கு அந்தப் பெண் கூறிய காரணம் கெட்ட ஆவிகள் அவற்றை உட்கொள்ளத் தூண்டின என்பதே.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### நகரை ‘நரகத்திலிருந்து’ பாதுகாப்பார்களா?

ஆசிரியர்
முரசொலி

யாழ் ஸ்ரான்லி விதியையும் கஸ்தூரியார் வீதியைடா இணைக்கும்கோணத்தில்உள்ளகுளத்தில்(ஹோட்டல் பரடைஸ் முன்பாக)இருந்து யாழ் கோட்டை புல்லுக்குளத்தை அடையும் கால்வாய் கடந்த பல வருடங்களாக துப்புரவு செய்யப்படாதுள்ளது.

இவையன்றி ஸ்ரான்லி வீதியில் இருந்து ஆஸ்பத்திரிவீதிக்கு செல்லும்போது கஸ்தூரியார் வீதியின் இடது பக்கமாக உள்ள கடைகளின் பின்னால் செல்லும் கால்வாய்ப்பகுதி சேறும் சகதியுமான சதுப்பு நிலமாகவும் சில இடங்களில் குப்பை மேடாகவும் சில இடங்களில் ஹோட்டல்களிலிருந்து வீசப்படும் வாழைஇலை கும்பல்களும் மேலும் சில இடங்களில் துப்புரவு செய்யப்படாத சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கடைச் சொந்தக்காரர்கள் கடைகளை திருத்தும்போதும் புதிதாக கட்டும் போதும் பழைய இடிபாடு கழிவுகளை கேட்பாரற்ற நிலையில் அப்படியே போட்டிருப்பதையும் தற்போது கண்கூடாக காணமுடிகின்றது.

அதே நேரத்தில் அந்தப்பக்கத்தில் உள்ள கிணறுகள் ஆழம் குறைந்தவையாகவும் நன்னீராகவும் உள்ள போதிலும் மேற்கூறப்பட்ட வடிகாலில் அழுக்கு நீர் தேங்கி நிற்பதால் அருகேயுள்ள கிணறுகளிலும் அதே மாதிரியான நீரின் சாயலும் சுகாதாரமற்ற நிலையும் காணப்படுகின்றது.

மாநகர ஆணையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட ஊழியர்களும் உடனடியாக நகரை நரகத்திலிருந்து பாதுகாத்து சுகாதாரத்தை பேண வகை செய்யும் வண்ணம் முரசொலி வாயிலாகக் கேட்கின்றேன்.

வண்ணார்பண்ணை — வண்ணை காவலன்

### ஒரே சங்கத்தில் இந்த விலை வித்தியர்சம் எதற்கு?

ஆசிரியர்,
முரசொலி

எமது பூநகரி பகுதியில் மின்சாரம் இன்மை காரணமாக தோட்டங்களுக்கு நீர்பாச்சுவதற்கு மண்ணெண்ணெய் இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் இவ்வேளையில் பூநகரி ப. நோ. கூ. சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையமானது ஒரு லீற்றர் மண்ணெண்ணெயினை ஒன்பது ரூபாவிற்கு விற்பனை செய்து வருகிறது. ஆனால் பூநகரி ப. நோ. கூ, சங்கத்தின் சில்லறை விற்பனை கடைகளில் ஒரு லீற்றர் 7. 50 சதத்திற்கு விற்பனை செய்யபபடுகிறது. எரி பொருள நிரப்பு நிலையம் 1. 50 சதம் அதிகமாக விற்பதற்கு காரணம் என்ன என்பது புரியவில்லை இது தோட்டக்காரர்களாகிய எம்மை மிகவும் பாதிக்கிறது. உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

வில்லடி, பூநகரி — ரவீந்தர்

## யாழ். மாவட்ட கஷ்டப்பிரதேச ஆசிரியர்கள் இடமாற்றம் இல்லை

யாழ் மாவட்டத்தில் கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றிவரும் பட்டதாரிப் பயிற்சி ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள் என்று தெரிய வருகின்றது.

வடமராட்சி கிழக்கு, தீவுப் பகுதி ஆசியவற்றில் கடமை புரிபவர்களுக்கே இச்சலுகை வழங்கப்படலாம் என்று கூறப்படுகின்றது,

இவ்விடயம் சம்பந்தமாக வடமராட்சி கோட்டக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளருக் கூடாக வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிய வருகின்றது. (43)

## ‘அஸ்வராஜா’வெள்ளைக்குதிரை நுவரேலியா செல்கிறது

கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் 1985 ஆம் ஆண்டு நடைபெற்ற அஸ்வமேத யாகத்தில் பயன் படுத்தப்பட்ட அஸ்வராஜா என்ற வெள்ளைக் குதிரை நுவரேலியாவில் உள்ள இலங்கேஷ்வரர் ஆலயத்திற்கு அனுப்பப்படவிருக்கின்றது.

இலங்கேஷ்வரர் ஆலய குருக்களின் பராமரிப்பில் விட்டு வைக்கப் படும் இக் குதிரையின் பராமரிப்புச் செலவின் ஒரு பகுதியை இந்து கலாசார அமைச்சு ஏற்று க்கொள்ளும்.

நுவரேலியாவின் ரேஸ் குதிரைகளைப் பராமரித்துப் பழக்கப்பட்ட ஒருவரே இந்த குதிரையைப் பராமரிப்பார். அவருடைய சம்பளத்தையும், குதிரைக்கான வைத்தியச் செலவினையும் அமைச்சு பொறுப்பேற்கும்.

இக் குதிரைக்கான உணவு வகைகளை ஆலய நிர்வாகம் வழங்கும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குதிரையின் புனிதத் தன்மை கெடாதபடி அதை ஒரு சொகுசு வண்டியில் ஏற்றி அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ’அஸ்வராஜா’ அஸ்வமேத யாகத்திற்காக பாகிஸ்தானில் இருந்து தருவிக்கப் பட்டது. (7 கி)

# பொழிச் செய்திகள்

## வடம. கிழக்கில் நினைவுத்தூபி

(தாளையடி)

கடந்த ஆண்டு வைகாசி மாதம் (30.31) முப்பதாம் முப்பத்தோராம் திகதிகளில் வடமராட்சி கிழக்கில் மாமுனைக் கிராமத்தை இந்திய இராணுவத்தினர் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட நேரடி மோதலின் போது வீர மரணமடைந்த வடமராட்சி கிழக்கு முன்னை நாள் பொறுப்பளர் லெப் சுலைக்சன், பெப்,முத்து, 2-ம் லெப் சூரி, இளம் புலிகள் தரன், கஜன், அசோக் அவர்களின் முதலாவது நினைவு நாளை முன்னிட்டு அமைக்கப்பட்ட நினைவு தூபியை வடமராட்சிப் பொறுப்பாளர் சூசை அவர்கள் அண்மையில் திறந்து வைத்து மலர்வளையம் சார்த்தினார். அவரைத் தொடர்ந்து இறந்த வேங்கைகளின் பெற்றோர்களினாலும் மலர்வளையம் சார்த்தப் பட்டது.

இவற்றைத் தொடர்ந்து நடைபெற்ற முதலாவது நினைவு அஞ்சலிக் கூடடத்தில் பெரும்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வில்லிசை குழுவினரின் வில்லுப்பாட்டும் நடந்துவந்த பாதை, இருகைதிகள், டைகமும் இடம்பெற்றது (18கி)

## மில்கோ பால் விலை அதிகரிப்பு

மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை பால் உற்பத்தி நிறுவனமான 'மில்க்கோ' நிறுவனத்தின் சகல பால் உற்பத்திப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன

கடந்த 2 ஆம் திகதி முதல் இப் புதிய விலைகள் அமுலுக்கு கொண்டுவரப்பட்டன, ே இதன்படி பால், பட்டர் மயாகட், ஹைலண்ட் பால் பா, ஐஸ்சிறீம், தயிர் என்றினவற்றின் வீலைகள் அதிகக்கப்பட்டுள்ளன

## தனிநாயகம் உருவச் சிலை

நெடுந்தீவில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் தவத்திரு. நாயகம் அடிகளாரின் உருவச் சிலை திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் துரிதமாக்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு 'தனிநாயகம் தமிழ் மன்றம்' இந்தநடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. பொதுமக்களின் உதவியுடன் இது அமையும் எனத் தெரிவிக்குப்பட்டுள்ளது, (கி)

## காங்கேசன் மத்திக்கு புதியகிராம அலுவலர்

(காங்கேசன்துறை)

வலி - வடக்கு உதவி அரசாங்க அதிபர் பகுதியில் புதிதாக உருவாக்கப்பட்ட கிராம சேவையாளர் பிரிவான காங்கேசன்துறை மத்தியின் கிராம சேவையாளராக கே. கே வேலாயுதபிள்ளை நியமிக்கப் பட்டுள்ளார்.

(ப -10 கி)

## அந்தோனியார் உற்சவம்

(காங்கேசன்துறை)

ஊறணி புனித அந்தோனியார் கோவில் உற்சவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. திருச்சொரூப சுற்றுலா 12 ம் திகதி செவ்வாய்க் கிழமை நடை பெறவுள்ளது.

(ப. 10கி)

## கற்புலத்து மனோன்மணி வழிபடுவோர் சங்கம்

(கொக்குவில்)

நந்தாவில் கற்புலத்து அருள்மிகு மனோன்மணி அம்பாள் ஆலய வழிபடுவோர் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாக; தலைவர் சி. பத்மநாதன், செயலாளர் இ.இரத்தினசிங்கம்,பொருளாளர் ச. பரந்தாமன் ஆகியோரும் பத்துப்பேர் கொண்ட ஆட்சிக் குழுவினரும் வதரிவு பெற்றனர். (75-கி)

## 'கில்லறியோசப்' புலமைப்பரிசு

(மன்னார்)

சங். சகோதரர் கில்லறி யோசப் ஞாகார்த்த புலமைப் பரிசில் மன்னார் புனித சவேரியர் ஆண்கள் மத்திய மகா வித்தியாலயத்தில் ஏற்படுத் தப்பட்டுஉள்ளது.

கல்லூரி மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஆரம்பித்துள்ள இப் புலமைப் பரிசுத் திட்டத்தின் கீழ் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை க.பொ. த சாதாரண தரப்பரீட்சைகளில் சிறந்த பெறு பேறுகளை பெறும் மூன்று மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. (77கி

## நாவாந்துறை சென். நீக்லஸ் நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

நாவாந் துறை சென் நீக்லஸ் சனசமுக நிலையத்தின் புதிய நிர்வாகிகளாக தலைவர் சூ.தோமஸ். செயலாளர் போ. ஜோர்ச், பொருளாளர் பெ. இ. ஆனந்தநாயகம் ஆகியோரும் பகுதிப்பொறுப்பாளரும் தெரிவு பெற்றனர். (75-கி)

## 'மகவம்' விருது வழங்கல் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற இருந்த 'மகவம்' கௌரவ விருது வழங்கல் பிற்போடப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (72-கி)

இவ் வைபவத்தில் ஒப்பனைக் கலைஞர் சா முவேல் பெஞ்சமின் கௌர விக்கப்படவே இருந்தனர்.

## த. கம்பியூட்டர் வெளியீடு

'த கம்பியூட்டா' சஞ்சிகையின் ஆறாவது இதழ் வெளியீட்டு வைபவம் கடந்த வாரம் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினரான யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கே. கே. அருள்வேல் கலந்து கொண்டு சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். விரிவுரையாளர் த.சந்திரகுமார். தலைமை தாங்கிய இவ் வைபவத்தில், சஞ்சிகையின் புதிய பத்திரிகைக் குழுவினர் தெரிவும் இடம் பெற்றது. (73-கி)

## மரம்வெட்ட தடை

தீவகத்தில் மரங்கள் வெட்டுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இயற்கை வள அழிவை தடை செய்யும் நோக்குடனேயே இத்திட்டம் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது. (24 கி)

### விளையாட்டுத்துறை அதிகாரி தகவல்

# உளப் பாதிப்பைப் போக்க விளையாட்டுப் பயிற்சி உதவும்

(வவுனியா)

வடக்கு—கிழக்கு பகுதியில் உளரீதியாகத் தாக்கத்திற்குள்ளான நோயாளிகள் அநேகர் உள்ளனர். விளையாட்டுத் துறையில் இவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் உளரீதியான தாக்கத்தினை குறைக்க முடியும் என வட—கிழக்கு மாகாண விளையாட்டுத் துறை அமைச்சின் உதவிப் பணிப்பாளர் ஏ. எஸ். குணரட்ணம் தெரிவித்தார்.

'முரசொலி'க்கு இவர் மேலும் தெரிவித்ததாவது:

நமது பிரதேசங்களில் விளையாட்டுத்துறை மங்கிப் போவதற்கு காரணம் தகுந்த அதிகாரிகள் இல்லாததே அத்துடன் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதில்லை.

ஆர்வமுற்ற விளையாட்டுத் துறை வீரனுக்கு வீராங்கனைக்கு சமூகத்தில் தகுந்த இடம் கொடுப்பதில்லை இது எமது பகுதியில் விளையாட்டுத் துறையின் வீழ்ச்சிக்கு ஒரு காரணம்.

விளையாட்டுத் துறைக்கு அரசியல் உதவலாம் தவிர அரசியலைக் கொண்டு விளையாட்டுத்துறை வளர்க்க அனுமதிக்கக் கூடாது, என்றும் குறிப்பிட்ட திரு. குணரட்ணம் உடற்பயிற்சியான விளையாட்டு மூலம் நீண்ட கால ஆயுள், திடகாத்திரமான உடல் கட்டு, கவர்ச்சியான அழகு மூளைவளர்ச்சி, வீரம்ஆகியன கிடைக்கின்றது. அத்துடன் பல வியாதிகள் வராது தடுப்பதற்கு விளையாட்டு உறுதுணையாகின்றது என்றார். (11)

# கடவுச் சீட்டுப் பெறுவதில் இனி அரசஊழியருக்குச் சலுகை இல்லை

அனைத்து நாடுகளுக்குமான கடவுச் சீட்டுப்பெறுவதில் அரசாங்க ஊழியர்களுக்குவழங்கப்பட்ட சலுகை ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமாக அனைத்து நாடுகளுக்குமான கடவுச் சிட்டைப் பெறுவதற்கு 300 ரூபா மட்டுமே அரசாங்க ஊழியர்கள் கொடுத்து வந்தனர்.

ஆனால் இனிமேல் ஏனைய பொது மக்கள் வழங்கி வந்தது போல்1300/-ரூபாவை இவர்களுக்கு செலுத்த வேண்டும் என கொழும்பு குடி வரவு குடியகல்வுத் திணைக்களம் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இதைவிட மத்திய கிழக்காசிய நாடுகளுக்கு அனைவரும் முன்னர் போல் முன்நூறு ரூபா செலுத்தினால் போதும் என அறிவிக்கப்பட்டுள்ளது (7—கி)

# படித்த மகளிர் திட்டத்தில் பாடசாலை அமைக்க கோரிக்கை

(நாவற்குழி)

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் ஆரம்ப பாடசாலை ஒன்றை அமைத்துத் தரும்படி கோரும் மகஜர் ஒன்று பெண்கள் குடியேற்றத் திட்ட வாசிகளினால் அரசாங்க அதிபரிடம ஒப்படைக்கப் பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது எமது பகுதிகளில் உள்ள சிறார்கள் ஆரம்ப கல்வியை கற்பதற்கு வெகு தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது. அதனால் அவர்களுடைய கல்விவளர்ச்சி பாதிப்படைந்துள்ளது. இக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு இப்பகுதிக்கு 4 ம் ஆண்டு வரையிலாவது படிக்கக் கூடிய ஒரு ஆரம்ப பாடசாலை அமைத்துத்தந்து எமது சிறார்களுக்கு உதவும் படிகோரப்பட்டுள்ளது.(ப5கி)

# விறகுக்குப்பதில் நவீன அடுப்பு அறிமுகப்படுத்த நடவடிக்கை

விறகிற்காக காட்டு மரங்களினை அழிக்கும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் முகமாக விறகினை பாவிக்காது சாதாரண பாமர மக்களும் வாங்க கூடிய நவீன அடுப்பு தயாரிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை சூழல் பாதுகாப்பு முகவர் நிலையமும் உள்ளூராட்சி திணைக்களமும் மேற் கொண்டுள்ளன.

இதற்காக மட்டக்களப்பு மாவட்ட குடிசைக் கைத் தொழில் உதவிப் பணிப்பாளர் பி. குழந்தை குமரனின் ஆலோசனையும், உதவியும் பெறப்பட்டுள்ளதாக சூழல் பாதுகாப்பு முகவர் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (5 கி)

### யாழ் மாவட்ட

# மாடுகளில் வெளிமாவட்ட மக்கள் அதீத மோகம்

யாழ்மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு நல்ல இன மாடுகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

யாழ் மாவட்டத்தில் உள்ளவை நல்ல இன மாடுகள் என்பதால் வெளிமாவட்டங்களில் உள்ளவர்கள் பலர் அதற்கான பெறுமதியைக் கொடுத்து காடுகளை வாங்குகிறார்கள் எனவும் இதன் விளைவால் வெளிமாவட்டங்களில் பாலின் உற்பத்தி மிக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக யாழ் மாவட்டத்தில் பாலின் உற்பத்தி குறைவடைந்து செல்வதாகவும் காலப்போக்கில் பாலின் விலை அதிகரிக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது. (4)

## ஆய்வு நிறுவனத் தொழிற்சாலை

(கீரிமலை)

மாவிட்டபுரத்தில் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்குமுகமாக நெல்லிரசமும் பப்படமும் என்பவற்றை தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப் பட்டுள்ளது. தமிழீழ ஆய்வு நிறுவன இத் தொழிற்சாலையில் வறிய மக்களுக்கே தொழில் வாய்ப்பு வழங்கப் படவுள்ளது. (கி

# இன்றைய நிகழ்ச்சிகள்

## காங்கேசனில்

இன்றும் நாளையும் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் புத்தகக்கண்காட்சியும் விற்பனையும்நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண, சாரதா சேவாச்சிரமத்தின் ஆதரவுடன் தேசிய கலை இலைக்கியப் பேரணி இணைந்து இக் கண்காட்சியை நடாத்துகின்றது.

ராமகிருஷ்ண மிஷனாலும் தேசிய கலை இலக்கியப் பேரணியாலும் வெளியிடப்பட்ட பல அரிய நூல்கள் இக் கண்காட்சியில் வைக்கப்பட்டு விற்பனையும் செய்யப்பட உள்ளன.

இறுதி நாளான நாளை பிற்பகல் 2.30 மணிக்கு சொற்பொழிவும் நடைபெற உள்ளது. இதில் சுவாமி சித்திரூபானந்தாசெல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, குறமகள் எஸ். சிவானந்தம் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். (ப- 10கி)

## வைத்தீஸ்வராவில்

வைத்தீஸ்வர வித்தியாலத்தில் தமிழ்த்தினவிழா இன்று மேற்படி வித்தியாலய விவேகானந்தமண்டபத்தில் அதிபர் சரவணபவன் தலைமையில் காலை 9.30 ற்கு நடைபெறும்

முத்து சிவானந்தம் மங்கள விளக்கேற்றுவார் பிரதமவிருத்தினராக மகேசவேல் கலந்து கொள்வார்.

இங்கு இஸ்லாம் தந்த தமிழ் என்னும் பொருள் பற்றிஜனாப் எம்.எஸ். அப்துல் ரஹீமும் கிறிஸ்துவம் தந்த தமிழ்பற்றி நீ. மரியசேவியரும் உரையாற்றுவார்கள் மற்றும் கவியரங்கு பட்டிமன்றம் ஏட்டிக்குப்போட்டி நாடகம் என்பனவும் நடைபெறவுள்ளன. (கி

# வானொலியில் இன்று

புதன் 06- 06- 90

காலை

5.05 தோத்திரமாலை—விஷ்ணு சகஸ்ர நாமம்
5.30 பாமாலை—திருப்பாசுரம்
8.00 வாத்தியம்—துவாரம் மங்கநாயுடு
8.15 மெல்லிசைப் பாடல்கள்

பகல்

10.00 இசையமுதம்
10.30 கிளாரினட்—ஏ.கே.சி நடராஜா
10.45 சிறுவர்பாடல்கள்
11.00 புல்லாங்குழல்—ரி.ஆர்.மகாலிங்கம்

மாலை

6.15 அருளமுதம்
6.30 மகாவலி நிகழ்ச்சி
7.00 களத்துமேடு—சஞ்சிகை நிகழ்ச்சி
7.15 கதம்பம்-நகைச்சுவை அரங்கம்
7.45 வாத்தியம்

இரவு

9.20 பக்திப்பாடல்கள்
9.30 கலைப்பூங்கா— கே. எஸ். பாலச்சந்திரன்
10.00 இசைக் கச்சேரி—சுந்தரலஷ்மி செல்வராஜா
10.45 பஜன்

# அன்று புலிகளை அழிக்க வந்த ஹெலி

# இன்று மதிப்புடன் அழைக்க வருகிறது

''இலங்கை அரசு எமது போராட்டத்தை முறியடிக்க முடியாத நிலையில்தான் எம்மைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறது இலங்கை அரசு எமது போராளிகளினதும் தமிழீழ மக்களினதும் இலட்சிய உறுதிப்பாட்டினை தெளிவாகப் புரிந்துள்ளது.'

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு.ரஞ்சன் நாவற்குழி மகா வித்தியாலய மாணவர்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. தமுத்துக்குமாரசாமி தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திரு.ரஞ்சன் தொடர்ந்து பேசுகையில், கடந்த காலத்தில் இலங்கை இந்திய இராணுவங்களினால் நாம் பல இழப்புகளை கண்டோம் பல இன்னல்களை அனுபவித்தோம் இன்று ஓரளவு அமைதியாக இருக்கின்றோம்.

எமது கப்டன் மில்லரின் தாக்குதலின் பின் பயந்த இலங்கை அரசு இந்திய இராணுவத்தை அமைதிப் படை என்ற போர்வையில் இங்கு அழைத்து எம்மை அழிக்க முயன்றது ஆனால் இந்தியாவோ தனது வல்லாதிக்கத்தை நிலை நிறுத்த முடியாமல் குறுகிய காலத்திலேயே இந்த மண்ணில் இருந்து தோல்வியுற்று வெளியேறியது.

நாம் எந்த நிபந்தனையின் அடிப்படையிலும் இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தைக்கு செல்லவில்லை ஆனால் நாம் விதித்த நிபந்தனையை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டது.முன்னைய யுத்தங்களில் எம்மை அழிக்க எந்த ஹெலிகெப்ரர் பயன்பட்டதோ அதே ஹெலிகெப்ரர்தான் இன்று எம்மை பேச்சுவார்த்தைக்கும் அழைத்துச் செல்கிறது.

மாணவர் அமைப்பு உறுப்பினர் திரு.முருகதாஸ் பேசுகையில் ''கடந்த காலப் போராட்டத்தின் போது பொதுமக்களுக்குஒருபாலமாக அனுசரணையுடன் இருந்தவர்கள் போராளிகளாவார்கள்.,(ப 5)

## கி. சே. அலுவலர்களுக்கு அடிக்கிறது யோகம்

கிராமசேவை அலுவலர்களுக்கான அதிகரித்த சம்பளத்திட்டத்தை உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது

கிராம சேவை அலுவலர்களுக்கும் விசேடசேவை அலுவலர்களாக இருந்து கிராம சேவை அலுவலர்களாக பதவி மாற்றம் செய்யப்பட்டவர்களுக்கு மிடையிலான சம்பள முரண்பாடு நீக்கப்பட்டு புதிய சம்பள திட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

வருடாந்தம் 27,600 ரூபா திரட்டிய சம்பளம் பெற்றவர்கள் புதியசம்பளத்திட்டத்தின் படி வருடாந்தம் 28,800 ரூபா திரட்டிய சம்பளம்பெறுவார்கள் எனத்தெரிவிக்கப்படுகிறது. (05)

## மட்டு. சர்வோதய நிலையம்

## கால் ஊனமுற்றோருக்கு கை கொடுத்து உதவுகிறது

கால்கள் ஊனமுற்று நடமாட முடியாத 10 பேருக்கு மட்டக்களப்பு சர்வோதய நிலையம் முச்சக்கர வண்டிகளை வழங்க விருக்கிறது.

இதற்கென 10 முச்சக்கர வண்டிகள் சர்வோதய தலைமை அலுவலகத்தால் மாவட்ட நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக சர்வோதய நிலைய இணைப் பதிகாரி தெரிவித்தார்.

மட்டக்களப்பில்

## மீனை அச்சமின்றி உண்ணலாம் ஆராய்ச்சி நிறுவனம் அறிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிரதேசத்தில் பிடிக்கப்படும் மீன்களை மக்கள் உண்ணலாம் எனவும், இம் மீன்களை உண்பதால் நோய் ஏற்படுமென்ற சந்தேகமோ பீதியோ கொள்ளத் தேவையில்லை எனவும் மீன்பிடி தேசிய ஆராய்ச்சி நிறுவனம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் பிடிக்கப்படும் மீன்களுக்கு நோய் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து கொழும்பிலுள்ள மீன்பிடி தேசிய ஆராய்ச்சி நிறுவனத்தை சேர்ந்த உணவு மருந்து பரிசோதகர் மட்டக்களப்புக்கு வருகை தந்து நோய் ஏற்பட்டிருப்பதாக கூறப்பட்ட மீன்களை எடுத்துச் சென்றார்.

தேசிய ஆராய்ச்சி நிலையத்தில் இந்த மீன்கள் தகுந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த பரிசோதனைகளை அடுத்து தேசிய ஆராய்ச்சி நிறுவனம் பூரணமான அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- மட்டக்களப்பு பிரதேசத்தில் வெப்ப நிலை அதிகரிப்பே மீன்களின் தோல்களில் சில தழும்புகள் ஏற்பட காரணமாகின. இந்த வெப்பநிலை தணிந்துள்ளதால் மீன்களுக்கு ஏற்பட்ட தழும்புகள் முற்றாக மறைந்துள்ளன.

இந்த மீன்களை மக்கள் எந்த அச்சமும் இன்றி உண்ணலாம் தற்போது மீன்களுக்கு நோய் இருப்பதாக கூறப்படுவதில் எந்த உண்மையும் இல்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

## அந்த மாணவன் தாக்குதல் மேலிடம் அசமந்தப் போக்கு

அதிபரினால் தாக்கப்பட்டு பாதிப்புக்குள்ளான சின்னராசா விமலதாஸ் (வயது 12) என்ற மாணவன் விடயத்தில் வடமராட்சிக் கோட்டக் கல்வி காரியாலயம் ஏனோ தானோ என அக்கறையின்றி நடந்து கொள்கிறது எனக் குறைபட்டுக் கொள்கின்றார் மாணவனின் தாயார் திருமதி எஸ். சின்னராசா

மேற்படி வைத்தியசாலையில் மாணவனைப் பராமரிந்து வரும் அவர் மேலும் தெரிவிக்கையில்; அநீதியான முறையில் நடந்து கொண்ட கல்லூரி அதிபர்மேலான முறைப்பாட்டினை நாம் கோட்டக்கல்விப் பணிப்பாளரிடம் கொடுத்திருந்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதினையும் தனதுமகனின் பாதிப்பினையும் பெரும் வேதனையுடன் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன் பாடசாலை மாணவர் தகராறின் எதிரொலியாக பிரஸ்தாப மாணவன் அதிபரால் தாக்கப்பட்டதாக செய்தி வெளிவந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். (39)

## கல்வியங்காட்டுப் பகுதியில் நிவாரணப்பணி துரிதம்

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கல்வியங்காடு J/259 கிராமசேவையாளர் பிரிவில் ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் வீடுகள் திருத்துவதற்கான பதினையாயிரம் ரூபா நன்கொடைப் பணம் வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பழைய இருபாலை கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்த அனைவரும் விண்ணப்பப் படிவங்கள் பெறலாம் என்றும் குடும்ப அட்டையில் இரண்டாம் ஓட்டை அடைத்தவர்களுக்கு மட்டும் படிவங்கள் விநோகிக்கப்படும் என்றும் கிராமசேவை அலுவலர் திரு. ஜே.எஸ். செல்லத்துரை தெரிவித்துள்ளார். (33)

### எவ்வித ..

அமைப்பிற்கான ஆறாவது திருத்தத்தை நீக்கக் கோரும் மசோதாவை தனிநபர் மசோதாவாக நாடாளுமன்றத்தில் கொண்டு வரும் முயற்சியில் நாம் தீவிரமாக ஈடுபட்டு வருவது யாவரும் அறிந்ததே. இதற்கான சட்ட வரைவைத் தயாரித்து முன்னறிவித்தல் கொடுக்க நாம்தயாராகஇருந்தோம்.

இந்த விடயம் தொடர்பாக 2-ம் திகதி ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ அவர்களுடனும், 3-ம் திகதி நீதியமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ்.ஹமீத் அவர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. ஆறாவது திருத்தத்தை நீக்கும்வகையில் அரசு துரிதமாக செயற்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டைத் தெட்டத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் எடுத்துரைத்தோம்.

எமது பேச்சு வார்த்தைகளின் விளைவாகவும், தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் இடம் பெற்றுவரும் பேச்சு வார்த்தைகளைக் கருத்திற் கொண்டும் இலங்கை அரசு உடன் நடவடிக்கை எடுக்கும் எனக் கருதுவதால் இம்மசோதாவை இவ்வாரம் சமர்ப்பிப்பதனைத் தாமதப்படுத்தியிருக்கின்றோம். அரசு உடன் நடவடிக்கைமேற்கொள்ள இக்கால அவகாசம் பயன்படும் என் நம்புகின்றோம்.

இக்கால அவகாசத்தை அரசும், எதிர்க் கட்சிகளும் உரிய முறையில் பயன்சடுத்தி தமிழ் பேசும் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளை அங்கீகரிக்க முன் வர வேண்டும், எந்தவிதமான முன் நிபந்தனைகளுக்கும் இடமளிக்காத வகையில் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கித் தமிழ் பேசும் மக்கள் ஜனநாயக் அரசியல் செற்பாடுகளில் நம்பிக்கை கொள்ளத்தக்க சூழலை உருவாக்கப்படல் வேண்டும் எனக் கோருகின்றோம்.

## மக்கள் வங்கியில் பணப் புழக்கம்

நீண்ட நாட்களுக்கு பின் நேற்று வல்வெட்டித்துறை மக்கள் வங்கியில் பணம் கொடுக்கல் வாங்கல் இடம் பெற்றது. இதனால் நேற்று வங்கியில் வழமைக்கு மாறாக சனக்கூட்டம் அதிகமாக இருந்தது. (22)

### மக்கள்...

லகத்தில் கடமையாற்றுவார்கள்.

காலை 9 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரைப் பொதுமக்கள் தமது பிரச்சினைகளைச் சம்பந்தப்பட்ட திணைக்கள ஊழியர்களிடம் தெரிவிக்கலாம்.

ஒவ்வொரு நாளும் பிற்பகலில் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் தமது திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கிடைக்கப்பெற்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கேட்டறிந்து தெரிவிப்பார். (05)

### பரந்தன்...

கின்றன.

இது சம்பந்தமாககழிவுநீரை உரிய இடத்திற்கு சுகாதார முறைப்படி சேர்க்குமாறு கிளிநொச்சி பிரதேச சபைக்கும், சுகாதாரப்பகுதிக்கும் பல முறை பொது மக்கள் முறையிட்டும் எது வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் விடுதலைப் புலிகள் கிளிநொச்சி சுகாதாரப் பொறுப்பாளருக்கு மக்கள் இது சம்பந்தமாக மகஜர் ஒன்றை நேற்று கொடுத்துள்ளனர். (35)

### யதார்த்த ..

வேகத்தில் மேலும் அதிகரித்ததும், ஏற்கனவே ஜே.வி.பி வன்செயல்களால் பொருளாதார நிலையில் மிக ஆட்டம் கண்டிருந்த அரசாங்கம் தன் இறுக்கத்தைத் தளர்த்தி புலிகளை அனுசரித்துப் போவதே புத்திசாலித்தனம் என யதார்த்த பூர்வமாக உணர்ந்து கொண்டதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இத்தகைய சூழ் நிலையில் எழுந்த எண்ணப்பாடே அரசாங்கம் புலிகளுடன் நேசத்தை வளர்க்க முற்பட வழிகோலிற்று எனப்படுகின்றது.

### கடதாசியுடன்...

நோயாலர்கள் கையில் வெள்ளைதுண்டுக்கடதாசிகொண்டு போய் வைத்தியரிடம் ஒப்படைத்தால் தான் நோய்பற்றி பரிசோதிக்கப்படும் அதே கடதாசியில் தான் மருந்து எழுதப்படும்.

மிகவும் பின்தங்கிய கிராமத்தில் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வாழும் பிரதேசத்தில் இப்படியான நிலையில் மருத்துவ மனை இயங்கி வருவருவதால் நோயாளர்கள் மிகுந்த கஷ்டத் துக்குள்ளாகின்றனர். (35)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

## கேள்விப்பத்திர அறிவித்தலுக்கான திருத்தம்

### 1000 வெள்ளிப்பதக்கம் வழங்கல்

எமது 5-6-1990 திகதிய மேற்படி கேள்விப்பத்திரத்திற்கான விளம்பரத்தை பின்வருமாறு திருத்தி கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். வெள்ளியிலாலான 70X55 செ. மீ. அளவுடைய நீள் வட்ட வடிவான 1000 பதக்கங்கள் என்பது எவர்சில்வரிலான (Eversilver) 70X55 மில்லி மீற்றர் அளவுடைய 1000 பதக்கங்கள் என்பதாகும்.

பதிவாளர்


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட்;நிறுவனத்தினால்,யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ல இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 06.06-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது